# வரதர் இந்தியாவில் புகலிடம் பெறுவதற்கு ராஜதந்திரி ஒருவர் தமிழகத்தில் முயற்சி

(சென்னை)

வடக்கு கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் திரு வரதராஜப் பெருமாளுக்கு இந்தியாவில் புகலிடம வழங்கும் முயற்சியில் இந்திய ராஜதந்திரி ஒருவர் ஈடுபட்டுள்ளதாக ஏ. எப். பி. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வரதராஜப் பெருமாளுக்கு புகலிடம் வழங்குவது தொடர்பாக தமிழக முதல்வர் மு, கருணாநிதியைச் சந்தித்துஇந்த ராஜதந்திரி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

திரு. பெருமாளுக்கு புகலி

(8-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 | மாசி: 25 | ஷஃபான் பிறை: 11 | இதழ்: 24
யாழ்ப்பாணம் | வெள்ளிக்கிழமை | 09-03-1990

## ரஞ்சனின் கோரிக்கையை இந்திய தூதுவர் புதுடில்லி அதிகாரிகளிடம் விளக்கம்

(புதுடில்லி)

வடக்கு-கிழக்கு முன்னாள் முதல்வருக்கான பாதுகாப்பை இந்தியா வாபஸ்பெறவேண்டும் என்ற இலங்கையின் கோரிக்கையை இந்தியத் தூதர் திரு. மஹஹோத்ரா புதுடில்லி அதிகாரிகளிடம் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஈழ ஜனநாயகக்குடியரசு'ப் பிரகடனத்தை இந்தியா ஆதரிக்கவில்லையானால் திரு. வரதராஜப்பெருமாளுக்கு வழங்கியுள்ள சகல பாதுகாப்புக்களையும் இந்தியா வாபஸ் பெறவேண்டும். அத்துடன் இலங்கையிலிருந்து அவரை இந்தியா அழைத்துக்கொள்ள

(8ம் பக்கம் பார்க்க)

# அரசியல்சட்ட 6-வது திருத்தம் ரத்துச் செய்வது தொடர்பாக ஜனாதிபதி பரிசீலனை செய்வார்

## அமைச்சர் ரஞ்சன் தகவல்

(கொழும்பு)

**இலங்கையில் மாகாணசபை, பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஒருவர், நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற உறுதிமொழி அளிக்கவேண்டும் என்ற அரசியல் சட்ட 6வது திருத்தத்தை விலக்கிக்கொள்வது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று வெளி விவகார அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. ரஞ்சன் பத்திரிகையாளருடன் பேசுகையில் கூறியதாவது:

விடுதலைப் புலிகள் இயக்கம் ஜனநாயக வழிக்கு வருவதற்குச் சிரமங்கள் இருப்பதாகத் தெரிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டி, அவர்களின் சுய மரியாதைக்கும், கௌரவத்துக்கும் இடையூறு ஏற்படாத வகையில் இந்த அரசியல் திருத்தத்தை ரத்துச்செய்வது பற்றி ஜனாதிபதி ஆர். பிரேமதாசா பரிசீலனை செய்வார்.

இலங்கையில் ஒரே ஒரு அரசாங்கமே உண்டு. ஏனையவை யாவும் மாகாண சபைகளே வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைப்பது சம்பந்தமாக அரசியலமைப்புச் சட்ட விதிகளைத் தொடர்ந்து பரிசீலித்து

(8-ம் பக்கம் பார்க்க)

## மாகாணசபை நிர்வாகம் விரைவில் ஜனாதிபதி பொறுப்பில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தை சில தினங்களில் ஜனாதிபதிபொறுப்பேற்பார் என்று கொழும்பில் அரசு வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சபை 'ஈழ ஜனநாயக குடியரசாக' பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்தே தற்போது மாகாணசபை நிர்வாகம் செயலிழந்துள்ளது.

மேற்படி நிர்வாகத்தை ஜனாதிபதி பொறுப்பேற்பார் என்ற உத்தரவு வாரஇறுதிக்குள் வெளியிடப்படும் இதற்கான ஓர் நடவடிக்கையாக அவர்நேற்று மேற்படிமாகாண

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் மீண்டும் தந்திச்சேவையை ஆரம்பிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள தபால் நிலையங்களில் மீண்டும் தந்திச் சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை தபால் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. தற்போது தபால் நிலையங்களில் எடுக்கப்படும் தந்திகள் அனைத்தும் தபாலிலேயே அனுப்பப்படுகின்றன.

யாழ்.மாவட்ட பிரதம தபால் நிலையத்தில் சேவையாற்றிய தந்திச்சேவை ஊழியர்கள் இருபத்தி மூன்றுபேர் இச்சேவை தடைப்பட்டதால் இடமாற்றம பெற்றுள்ளனர். சேவை ஆரம்பமாகும்போது இவ்வெற்றிடங்களை தபால் திணைக்களம் நிரப்பவுள்ளது.

இரவுதபால் ரயில் சேவை ஆரம்பிப்பதற்கு முன்னர், இரவு ரயில்சேவை தபால் பகுதியில் சேவையாற்றும்

(8ம் பக்கம் பார்க்க)

## 19,000 அமைதிப்படை

(திருமலை)

வடக்கு-கிழக்கில் தற்போது சுமார் 19.000 இந்திய அமைதிப் படையினர் நிலை கொண்டுள்ளதாகவும் கடந்த மூன்று தினங்களில் சுமார் 1,500 படையினர் வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சியபடையினரும் மார்ச் மாதம் 15-ம் திகதிக்குள் வெளியேறி விடுவார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

[சி]

## மேஜர் காண்டீபன் மறைவு குடாநாடு ஸ்தம்பித்தது!

### பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று நேரில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழவிடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான மேஜர் காண்டீபனது பூதவுடல் நூற்றுக்கணக்கான இளைஞர்களும் தாய்மார்களும் கண்ணீர் மல்க அவரது தாய் தந்தையரின் வதிவிடமான கண்டாவளைக்குநேற்றுப் பகல் ஒன்றரை மணியளவில் எடுத்துச் செல்லப்பட்டது.

நேற்று முழுவதும் யாழ் குடாநாடு எங்கும் கடைகள் திறக்கப்படவில்லை, சந்தைகள் கூடவில்லை, வாகன சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெற்றன. ஆயிரம் ஆயிரம் பாடசாலை மாணவர்கள் சீருடைகளில் அஞ்சலியைச செலுத்தினா யாழ் குடாநாடே ஸ்தபபித

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் குழுக்களிடையே யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்த டில்லியிலும் சென்னையிலும் முயற்சி!

(சென்னை)

இந்திய அமைதிப் படையினர் வடக்கு-கிழக்கிலிருந்து முற்றாக வெளியேறு முன்னர் சகல தமிழ்க் குழுக்களிடையே ஒற்றுமையையும், இப்பகுதியில் யுத்த நிறுத்தம் ஒன்றையும் ஏற்படுத்துப் தீவிர முயற்சிகள் புதுடில்லியிலும், சென்னையிலும் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு கட்டமாக இலங்கைக்கான இந்தியத் தூதர் திரு எல். எல் மஹ்ஹோத்ரா

(8ம் பக்கம் பார்க்க)

## 'லக்ஸ்பிறே' பால்மா விலைகுறைப்பு

(கொழும்பு)

லக்ஸ்பிறே பால்மாவின் விலை இன்று தொடக்கம் குறைக்கப்பட்டுள்ளது

100 கிறும் பதினொரு ரூபா நாற்பது சதத்திற்கும்250கிறும் இருபத்தைந்து ரூபா தொண்ணூற்றிஐந்து சதத்துக்கும். 4.0 கிறாம் நாற்பது ரூபா நாற்பது சதத்திற்கும், 500 கிறும் ஐம்பது ரூபாவாகவும் விலகுறைக்கப்பட்டுள்ளது

(து)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய, பீற்றூட், கோவா விதைகள் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 3576)

பழைய தமிழ், ஆங்கில பத்திரிகைகள் விற்பனைக்குண்டு. விலை குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். ஈழநாடு, யாழ்ப்பாணம். (எ-591)

### புத்தகங்கள்

மார்ச் மங்கை, அம்புலிமாமா, சித்திரக் கதைகள் (50க்கு மேற்பட்டவைகள்) கண்ணதாசன் எழுதிய நூல்கள், பொக்கட் கலண்டர்கள், சேதுராமனின் அதிர்ஷ்ட விஞ்ஞானம் மற்றும் பல எழுத்தாளர்களின் எண் ஜோதிடங்களும், நாவல்களும் விற்பனையாகின்றன. ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3553)

## மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியினை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு லங்கா ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபர் வைத்திய கலாநிதி பசுபதி உரோமகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்: இதுசம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கையில்! பழைய மாணவர்கள் எதிர்நோக்கும் பதிவுப் பிரச்னையை ஆராய்வதற்கும், இக்காலகட்டத்தில் கல்லூரியின் வளர்ச்சி மற்றும் கல்லூரி வளர்வுறுது பின்தங்கிய நிலைக்குரிய காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும் கல்லூரிகளில் தம்மைச் சந்திக்குமாறும், பழைய மாணவர்களை ஒன்றுபட்டுச் செயல்படுமாறும் கோரியுள்ளார்.

## "நமது பிரதேசத்தை வளம்படுத்த விஞ்ஞான யுக்திகளை பயன்படுத்துவோம்"

(யாழ்ப்பாணம்)

''தமிழ்பிரதேசங்களை வளம்படுத்தவேண்டுமானால் அதற்கு யாழ்ப்பாணப் பலகலைக்கழக அறிஞர்களின் ஒத்துழைப்பும், அவர்களது ஆராய்ச்சிகள் மூலம் பெறப்படும் அறிவும் மிக அவசியமானது. இது காலவரையும் இப்பிரதேச அபிவிருத்தியில செயல்பட்ட எவரும் பல்கலைக்கழக மட்டத்தில் உதவியைப் பெறத்தவறிவிட்டனர்''

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல் கழகம் வெளியிட்ட 'புவியியலாளன்' ஐந்தாவது இதழ் வெளியீட்டு விழாவில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக தாவரவியற்துறைத்தலைவர் பேராசிரியர் ரி. தெய்வேந்திரராஜா தெரிவித்தார்.

விழாவிற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற் கழகத் தலைவர் திரு. கே. இராஜேந்திரன் தலைமை தாங்கினார். பேராசிரியர் ரி. தெய்வேந்திரராஜா தொடர்ந்து உரையாற்றுகையில்; வடக்கு. கிழக்கு மாகாணங்களில் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய நிலை இன்றில்லை. பலபயிர்கள் அழிக்கப்பட்டுள்ளன. பொருளாதார வளம் தரும் பயிர்கள் வளர்க்கப்பட்டுள்ளன காடுகளை அழிக்க வேண்டாம் என சிலர் சொல்கிறார்கள். தரிசு நிலங்களை அப்படியே விட்டு விடுங்கள். சுவாத்தியம் மாறி விடும் என்கிறார்கள். யாராவது ஒருவர் எமது பிரதேசத்தின் வளத்திற்கு எவ்வளவு காடுகள் இருக்கவேண்டுமென்று ஆய்வுகள் நடத்தினார்களா? சுருங்கச் சொன்னால் நாம் மாறிவரும் விஞ்ஞானத்துக்கமைய நமதுபிரதேசத்தை அறிவு பூர்வமாக விஞ்ஞான யுக்திகளைப்பயன்படுத்தி அபிவிருத்தி செய்யவேண்டும். புவியியற்துறையாக இருந்தாலும்சரி, விவசாயத் துறையாக இருந்தாலும் சரி சுற்றுப்புற சூழல்களால் அறிவை முழுமையாகஏற்படுத்தமுடியாது. கூர்மைப்படுத்த விஞ்ஞான முறை அவசியம். இன்றைக்குபுவியியல் துறையை எடுத்துக்கொண்டாலும் இந்தநிலைதான்'' என்றார்.

புவியியல் துறைத்தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அறிமுகவுரை வழங்குகையில்''இலங்கையின் ஐம்பது ஆண்டு புவியியல் கல்வி வளர்ச்சியில் பலரும் தமது பங்களிப்பைச் செய்துள்ளனர். அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் பத்து ஆண்டுகளில் ஐந்து புவியியலாளன் மலர்களை வெளியிட்டு பணியாற்றியுள்ளது'' என்றார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் திரு. எஸ். கே. பரமேஸ்வரன் தமதுரையில்,'' மிக நெருக்கடியான காலகட்டத்தில் பல ஆய்வுக்கட்டுரைகளைத் தாங்கி புவியியலாளன் வெளிவந்திருப்பது பாராட்டுக்குரியது'' என்றார்.

கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் தமதுரையில், ''இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு துறையை எடுத்துக்கொண்டாலும் பலமுனைகளில் வளர்ச்சி கண்டுள்ளது. அந்தவகையில் புவியியல் துறையும் நல்லமுன்னேற்றம் கண்டுள்ளது இம்மாதிரியான அறிவுபூர்வமான ஆய்வுகளை நூலுருவில் கொண்டு வரும் முயற்சிக்கு பல்கலைக்கழகம் எதிர்காலத்தில் கூடிய நிதியை ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்'' என்றார்.

பிரதிகளை தொழிலதிபர்கள் கே. குமாரசாமி, கே. இராமச்சந்திரன் பி. தெய்வேந்திரம் பல் வைத்திய கலாநிதி கு, சண்முகநாதன் வி. சபாரத்தினம் ஆகியோர்பெற்றுக்கொண்டனர்.

ஆய்வுரையை கே. குணசிங்கராஜாவும் நன்றியுரையை செல்வி எஸ். சுனித்திராவும் வழங்கினர். (12)

## "சிறந்த அறிவு நூல்கள் மக்கள் நல்வாழ்வுக்கு தகுந்த வழிகாட்டியாகும்"

(தென்மராட்சி)

''மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு சிறந்த அறிவு நூல்கள் தகுந்த வழிகாட்டியாக விளங்குகின்றன. சிறுவயதில் பிள்ளைகளுக்கு தந்தை தாயாரும் பாடசாலைப் பருவத்தில் ஆசிரியர்களும் வழிகாட்டிகளாக உதவுகின்றனர். இக்கால எல்லை முடிவுற்றதும் இவர்களின் பாதுகாப்பிலிருந்து நீங்கியதும் மாணவர்கள் மனம்போனபோக்கெல்லாம் செல்லாது மனிதன் மனிதனாக வாழ வழிகாட்டுவது சிறந்த அறிவுநூல்களாகும்''.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம ஆதரவில் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த ஸ்ரீ இராமகிருஷ்ண விவேகானந்தா புத்தகக் கண்காட்சியை பிரதம விருந்தினராக மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த சாவகச்சேரி டிறிபேக் கொத்தணி அதிபர் கனகசபை பாலச்சந்திரன் இவ்வாறு கூறினார்

கல்லூரி அதிபர் திருமதி நவநீதம் தாமோதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கண்காட்சியில் திரு. பாலச்சந்திரன் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது; 'ஒருவனை முழுமனிதனுக்குவது அறிவு நூல்கள். மககளிலும் ஆறறிவு அற்றவர்கள் பலர் உளர். இவர்கள் மாக்களாவர் மாக்களை மக்களாகக்குவது அறிவு நூல்கள். அறிவு நூல்களைக் கல்லாது பண்பான வாழ்வு தெரியாது வாழ்க்கையில் உண்டாகும் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண வழிதெரியாது திக்குமுககாடி வாழ்க்கையில் வெறுப்படைபவர்கள் அதிகம்பேர். தற்போதையகல்வி முறையிலும் ஆசிரியர்கள் கற்பித்தலிலும் வழிகாட்டிகளான பாரதம் இராமாயணம் போன்ற உயரிய இலக்கிய நூல்கள் கையாளப்படுவதில்லை. இது பெருங்குறைபாடு, பாரதம் இராமாயணம் போன்ற இலக்கிய நூல்களில் மனிதன் படும் கஷ்டங்களும் அதற்கான தீர்வுகளும் கூறப்படுகின்றன. எனவே இவ்வகையான இலக்கிய நூல்களை மாணவர் கற்று வாழ்க்கையில் விரக்தியின்றி வாழ வேண்டும். இதற்கு இங்கு காட்சியில் விளங்கும் நூல்களை வாங்கிப் படித்து வழிதவறிப் போகாது தனியார் கல்வி நிலையங்களிற் காலம் கடத்தாது நூல்நிலையங்கள் சென்று உள்ளத்தில் அறிவொளியை ஏற்றுங்கள்.''

ஸ்ரீமத் சித்ரூபானந்த சுவாமிஜீ ஸ்ரீ இராமக்கிருஷ்ண சுவாமி, விவேகானந்தர் ஆகியோர் காட்டிய உத்தம வழிகளைப் பின்பற்றி வாழ வேண்டுமென்று கூறினார்.

## பயிற்சி நெறிகள் 14-ல் ஆரம்பம்

(புலோலி)

கரவெட்டி தேவரயாளி இந்துக்கல்லூரி தொழில் நுட்பப்பிரிவின் இவ்வருடத்துக்கான பயிற்சி நெறிகள் இம்மாதம் 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன

மின் இயந்திரத்தில் தளபாட உற்பத்தி மரக்கடைச்சல் வீட்டு மின் இணைப்பு ஆடை தைத்தல், மோட்டார் பொறிமுறை ஆகிய பயிற்சி நெறிகள் இடம் பெறும். (61)

## விபத்தில் காயம்

(மட்டுவில்)

எரிபொருள் ஏற்றி வந்த பவுஸர் ஒன்று ''சாலி''மோட்டார் சைக்கிளுடன் மோதியதனால் மோட்டார் சைக்கிளில் வந்தவர் பலத்த காயங்களுக்குள்ளானார்

இந்த விபத்து நேற்று சாவகச்சேரி பஸ் நிலையத்திற்கு அருகாமையில் நடைபெற்றது காயமடைந்தவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (82)

## செய்முறை ஒப்படைப் புள்ளிகள்

(நாவற்குழி)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களிலிருந்து தொலைக்கல்வி மூலம் 87/89 ம் கல்வி ஆண்டில் பயிற்சி பெற்ற பயிற்சி ஆசிரியர்களின் செய்முறைப் புள்ளிகளையும், ஒப்படைப் புள்ளிகளையும் இம்மாதம் 12-ம் திகதிக்குமுன்னர் சமர்ப்பிக்குமாறுதொலைக்கல்விப் பணிப்பாளர் சகல பிரதேச தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பணித்துள்ளார். (107)

## மகளிர்தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினர் சர்வதேச மகளிர் தினத்தை எதிர்வரும் 24ம் திகதி கொண்டாட இருககிறார்கள்.

சங்க மட்ட குழுவினருக்கிடையே நடைபெறும் போட்டிகளில் சிறுகதை. பேச்சுப் போட்டி பூச்செய்தல், ஐசிங் கேக்செய்தல், மணப்பெண்ணை அலங்காரம் செய்தல் ஆகியன இடம்பெறும்.

கட்டைவேலி நெல்லியடி ப. நோ, கூ. சங்கத்தினரின் நடமாடும் வலி - வடக்கு தென்பகுதிக் கூட்டுறவுச் சங்கத்தினரின் நாடகமும், தென்மராட்சி கூட்டுறவுச் சங்கத்தின் (கைதடி) வில்லுப்பாட்டு தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாலர் பாடசாலை நிகழ்ச்சி ஆகியன இடம்பெறஇருக்கின்றன. (ம)

## பதவி வெற்றிடம்

ஓய்வுபெற்ற பொலிஸ் மற்றும் படைப்பிரிவுகளில் கடமையாற்றியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேற்பார்வை செய்தல், விடயங்களை சிறந்தமுறையில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தல் போன்றன சில குறிப்பிட்ட கடமைகளாகும். திறமையுடன் தனித்துவமாகவும் செயல்படக்கூடிய தகுதியுடையவர்கள் 14 - 3 - 90-ந் திகதிக்கு முன்னர் விபரங்களுடனும் உரிய சான்றிதழ்களுடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 590, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (ஏ 590)

## ஓய்வூதியம் பெறுவோர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

1987-ம் ஆண்டிற்கு முன்னர் தபால் நிலையங்களிலும், உப தபாற் கந்தோர்களிலும் ஓய்வூதியம் வழங்கப்பட்டுவந்தது போல் மீண்டும் தத்தமது பகுதித் தபால் நிலயங்களிலும், உப தபாலகங்களிலும் தமது ஓய்வூதியத்தை வழங்க நடவடிககை எடுக்குமாறு ஓய்வூதியம் பெறுவோர் யாழ். அரசாங்க அதிபரைக் கோரியுள்ளனர்.

அடுத்த மாதத்திலிருந்து இந்த ஒழுங்கு செய்யப்படலாம் என்று எதிர்பார்ப்பதாக ஓய்வூதியம் பெறுவோர் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் நாட்டின் சூழ்நிலை காரணமாக தபாலகங்களில் ஓய்வூதியம் வழங்குவது தடைப்பட்டிருந்தது, தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதால் 1987 ம் ஆண்டிற்கு முன்னர் நடைமுறையிலிருந்தது போன்று தபாலகங்களில் ஓய்வூதியத்தை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. (54)

## கொடி தினம்

(மானிப்பாய்)

கைதடி சைவச் சிறுவர் இல்லம் 15வது கொடி நாள் விழாவை நாளை 10ம் திகதி காலை கொண்டாடவுள்ளது.

பிரதம விருந்தினராகத் தவத்திரு சுவாமி சித்ரூபானந்தா அவர்கள் கலந்துகொள்கின்றார்கள். (71)

## இன்று

(மானிப்பாய்)

கொழும்புத்துறை ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோவில் தேர்த் திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது.

இருபது லட்சம் ரூபா செலவில் செய்து முடிக்கப்பட்ட இப் புதிய சித்திரத்தேர் முதற் தடவையாக இன்று வீதிவலம் வருவது குறிப்பிடத்தக்கது. பகல் அன்னதானமும் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெறும். (71)

## அளவைகள் நிறுவைகள்

(யாழ்ப்பாணம்)

மன்னார் கச்சேரியில் அளவைகள், நிறுவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் நடவடிக்கைகள் 12-ம் திகதிமுதல் 15-ம் திகதிவரை மேற்கொள்ளப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்திலிருந்து இதற்கென அளவைகள், நிறுவைகளுக்கு முத்திரையிடும் சாதனங்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இச்சந்தர்ப்பத்தை மன்னார் மாவட்ட வியாபாரிகள் தவறாது பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், வியாபாரிகள் தம்மிடமுள்ள தராசுகள், படிகள், லீற்றர்கள், மீற்றர் கோல்கள் ஆகியவற்றிற்குத் தவறாது முத்திரையிடவேண்டுமென்றும் நிறுவைகள், அளவைகள் பரிசோதகர் திரு. வை. கிருஷ்ணதாசன் அறிவித்துள்ளார். (54)

**Project Management Services Ltd.**
33, Brown Road, Neeraviadi, Jaffna
Engineering Consultants & Project Managers

# WANTED SECRETARY

We are looking for smart and Personable person under 35 years for appointment as Secretary to our Operations Manager.

Excellent command of the English Language and the ability to handle correspondence independently is essential for this position which is interesting, varied and challenging. Must have a knowledge of typing and shorthand. Post carry junior executive status and an enrolment package around RS. 2400/- per mensum.

Please write to the Operations Manager on or before 14 March 1990.

(A-589)

# ஆப்கானிஸ்தானில் புரட்சி முறியடிக்கப்பட்டும்

# கடும் சண்டை தொடர்கிறது

## விமானங்கள், டாங்கிகள் தாக்குதல்

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சதிப் புரட்சி நடவடிக்கை முறியடிக்கப்பட்டபோதிலும் அங்கு தற்போது கடும் சண்டை நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சண்டையில் ஆட்லறியும், விமானங்கள், ஹெலிகொப்டர்கள், டாங்கிகளும் ஈடுபடுத்தப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

அதிபர் நஜிபுல்லாவிற்கு விசுவாசமான படைகளும் சதிப்புரட்கி முயற்சியில் ஈடுபட்ட பாதுகாப்பு அமைச்சர் ஜனுப் சாநவாஸ் தனுய்க்கு விசுவாசமான படைகளும் பல பகுதிகளிலும் கடும் சண்டையில் ஈடுபட்டு வருகின்றன. எனினும் நிலைமை கட்டுப்பாட்டில் இருப்பதாக காபூல் வானொலி தெரிவித்துள்ளது.

நேற்று அதிபர் நஜிபுல்லா நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றுகையில்; புரட்சியை முறியடித்த இராணுவத்தினரை வெகுவாகப் பாராட்டினார். தற்போது அனைத்துப் பகுதியும் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் மக்கள் பொறுமையுடன் இருக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

எனினும் இந்த வானொலி உரை வழமையான அலைவரிசையிலல்லாமல் வேறோர் வானொலி நிலயத்தின் மூலமே ஒலிபரப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. புரட்சியாளர்களின் தாக்குதலில் வானொலிநிலயம் சேதமடைந்ததனாலேயே இவ்வாறு வேறொரு நிலயத்திலிருந்து ஒலிபரப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பல பகுதிகளிலும் கடும்சண்டைநடைபெறுவதை ஆப்கான் கெரில்லாக்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். புரட்சியாளர்களின் இரகசிய வானொலித் தகவல்களை தாம் இடைமறித்து கேட்டதாகவும் அதில் பாதுகாப்பு அமைச்சர் ஜனுப் சாநவாஸ் தனுயின் உத்தரவுகள் கேட்கக்கூடியதாயிருந்ததாகவும் கெரில்லாக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இரு தரப்பு யுத்தத்தில் தாம் எந்தப்பக்கத்திறகும் ஆதரவில்லை என்றும், ஆனால் சரணடைவோரை தாம் ஏற்பதாகவும் கெரில்லாக்கள் தெரிவித்துள்ளனர். (சி)

---

நேரடியாக அவதானிக்க

## அனைத்துக்கட்சித் தலைவர்கள் ஜம்மு - காஷ்மீர் விஜயம்

(புதுடில்லி)

ஜம்மு - காஷ்மீர் நிலை தொடர்பாக நேரில் சென்றறிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று நேற்று அந்த மாநிலத்திற்குச் சென்றுள்ளது. மேற்படி குழுவினர் மாநிலத்தின் பல பகுதிகளுக்கும் சென்று மக்களுடன் நேரடியாகக் கலந்துரையாடவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் பிரதமர் திரு. வி. பி. சிங் அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் பல மணி நேரம் சந்தித்து முக்கிய பேச்சுக்கள் நடத்தினர். இதன்போது மேற்படி கட்சித் தலைவர்கள் தெரிவித்தவாறு அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழுவொன்று அங்கு நேரடி விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

இதையடுத்து இக்குழுவினர் நேற்று ஜம்மு-காஷ்மீரின் சில முக்கிய பகுதிகளுக்கு விஜயம் செய்த இவர்களுக்கு ராணுவத்தினர் பலத்த பாதுகாப்பளித்தனர். தலைவர்கள் பலரும் பொதுமக்களிடம் உரையாடியதுடன் அப்பகுதிகளில் உள்ள சமூகத் தலைவர்களையும், அமைப்புகளையும் சந்தித்தும் பேசினர்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்குத் தாம் சகல உதவிகளையும் ஆதரவையும், வழங்குவதாக அனைத்துக் கட்சித் தலைவர்களும் பிரதமருக்கு உறுதியளித்துள்ளனர். நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தியும் முன்னாள் ஜம்மு - காஷ்மீர் முதலமைச்சர் ஜனுப் பருக் அப்துல்லாவும் கலந்துகொண்டனர். (சி)

---

பஞ்சாப்பில் —

## தீவிரவாதிகள் தாக்குதல் 22 இந்துக்கள் பலி!

(புதுடில்லி)

பஞ்சாப்பில் நேற்று முன்தினம தீவிரவாதிகள் கிராமப் பகுதியொன்றில் மேற்கொண்ட தாக்குதலில் 22பேர் கொல்லப்பட்டனர்; 35ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் கொல்லப்பட்டவர்களில் எட்டுப்பேர் சிறுவர்கள்.

பெரோஸ்பூர் மாவட்டத்தில் இந்துக்கள் வாழும் பகுதியில் தீவிரவாதிகள் இத்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். சந்தை ஒன்றில் நின்றோர்மீது திடீரென ஆயுதங்களுடன் தோன்றிய பல தீவிரவாதிகள் கண்டபடி சுட்டதாகவும், இதுசுமார் 10 நிமிடங்கள்வரை இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது

இச்சம்பவத்தையடுத்து உடனடியாக அவ்விடத்திற்கு பரா இராணுவப் பிரிவு அனுப்பி வைக்கப்பட்டது பலத்த தேடுதல் நடவடிக்கை எடுக்கப் பட்டபோதும் எவரும் கைது செய்யப்படவில்லை. அப்பகுதியில் தொடர்ந்தும் தேடுதல் இடம்பெற்றுவருகிறது.

மேற்படி சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ள பிரதமர் திரு. வி பி சிங் இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுக்க கடும் நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிட்டுள்ளார். இச்சம்பவத்தை பல ஆளும் கட்சி, எதிர்க் கட்சித் தலைவர்களும் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

காஷ்மீர் பிரச்னையில் முழுக் கவனமும் திரும்பியுள்ள இவ்வேளை அரசுக்குக் கடும் நெருக்கடி கொடுக்கவே பஞ்சாப் தீவிரவாதிகள் இச்செயலில் இறங்கியுள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். (சி)

---

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையினர் யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலுமுள்ள தலைவர்களுக்கும், சில பணியாளர்களுக்கும் நிதிக்கூற்றுச் சம்பந்தமான (படிவம் 28) ஒரு கருத்தரங்கை எதிர்வரும் 18-ம் திகதி நடாத்தத் திட்டமிட்டுள்ளனர்.

கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. எஸ். லிங்கநாதனின் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (ம)

---

கிரிக்கெட்:

## இந்தியா தோல்வி

(வெலிங்டன்)

இந்திய-ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற 3 நாடுகளுக்கிடையிலான சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் ஆஸ்திரேலியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49 ஓவர்களில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 212 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபில்தேவ் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களைப் பெற்றுர்.

அடுத்து ஆடிய ஆஸ்திரேலிய அணி 4 விக்கெட் இழப்பிற்கு 214 ஓட்டங்கப் பெற்றது. இதில் மார்க் டெய்லர் 58 ஓட்டங்களைப் பெற்றுர். (சி)

---

## பாண்டிச்சேரி அமைச்சரவை நேற்று பதவியேற்பு

(சென்னை)

பாண்டிச்சேரி புதிய அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றது. ஆறு அமைச்சர்களைக் கொண்ட இந்த யூனியன் பிரதேசத்தின் முதலமைச்சராக தி மு க வைச் சேர்ந்த திரு டி. ராமச்சத்திரன் பதவியேற்றுர்.

ஆறுபேரைக் கொண்ட அமைச்சரவையில் தி. மு. க. வைச்சேர்ந்தமூவரும், ஜனதாதளைச் சேர்ந்த இருவரும், ஒரு சுயேச்சை உறுப்பினரும் அமைச்சர்களாகப் பதவிப் பிரமாணம் செய்தனர்.

30 தொகுதிகளைக்கொண்ட இந்த யூனியன் பிரதேசத்தில் தி.மு க., ஜனதாதள், சுயேச்சைக் கூட்டணி 16 இடங்களையும், இந்திரா காங்கிரஸ்-அ தி மு.க. கூட்டணி 14 இடங்களையும் பெற்றது. முன்னர் இந்திரா காங்கிரஸ் வசமிருந்த ஆட்சி இப்போது தி மு க கூட்டணியிடம் மாறியுள்ளது. (சி)

---

புலிகள்

## மக்கள் நடைமுறைகளில் குறுக்கிடமாட்டார்கள்''

- சூசை

(வடமராட்சி)

மக்கள் நிர்வாகம் நடைபெறும் இக்காலகட்டத்தில் புலிகள் மக்களின் நடைமுறைகளில் குறுக்கிடமாட்டார்கள்'' என்று கடற்கரையில் நடைபெற்ற மக்கள் கருத்தரங்கில் வடமராட்சி புலிகள் பொறுப்பாளர் திரு. சூசை தெரிவித்தார்.

இதற்கமைய இனிமேல் வரப்போகும் மக்கள் அமைப்புக்களில் மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவர், அங்கத்தவர்களே அங்கம் வகிப்பார்கள் என்றும் அவ்விடயங்களில் நிச்சயம் புலிகள் தலையீடு இருக்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

அமேசன் நதிக்கு

## உல்லாசப் பயணம்வந்த 130 மாணவர்களைக் காணவில்லை!

### பலத்த தேடுதல் நடைபெறுகிறது

(லீமா)

அமேசன் நதிக்கு உல்லாசப் பயணம் மேற்கொண்ட பாடசாலை மாணவர்கள் 130 பேரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பெருமளவினர் சிறுவர்கள். அனைவரும் நதியில் நீராடியபோதே காணுமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 200 பேரைக் கொண்ட பாடசாலை ஒன்றின் உல்லாசப் பயணக்குழு தமதுவிடுமுறையைச்கழிக்க அமேசன் நதிக்கரைக்கு நேற்று முன்தினம் வந்தனர். அங்கு நதியில் நீராடிக் கொண்டிருந்தபோதே இந்த 130பேரும் காணுமல் போயுள்ளனர்.

இதையடுத்து இவர்களைத் தேடும் பணியில் இராணுவத்தினரும், கடற்படையினரும் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் சுமார் 50 பேர்வரை காப்பாற்றப்பட்டதாகவும் பத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களின் சடலங்கள் மீட்கப் பட்டதாகவும் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நதி திடீர் திடீரென பெருக்கெடுக்குமென்றும் சிறுவர்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் அப்பகுதி மக்கள் பலதடவைகள் ஆசிரியர்களை எச்சரித்திருந்தனராம். காணுமல் போனவர்களில் மாணவர்களை அழைத்து வந்த மூன்றுஆசிரியர்களும் அடங்குவர்.

இச்செய்தியைக் கேட்டு மாணவர்களின் பெற்றோர்களும் உறவினர்களும் நதிக் கரைக்கு செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

---

## கிளிநொச்சியில் புதிய இந்து இளைஞர் மன்றம்

(கிளிநொச்சி நிருபர்)

''கிளிநொச்சி வாழ் இந்துக்களின் சுபீட்சவாழ்வு கருதியும் இந்துமத வளர்ச்சியை நோக்கமாக கொண்டும் கிளிநொச்சி குருகுலம் அரிய பணிகளை நல்கி வந்துள்ளது இந்தவகையில் குருகுல நிர்வாகத்தின் ஏற்பாட்டில் இந்து இளைஞர் மன்றம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்படுகிறது.''

இவ்வாறு இந்து இளைஞர் மன்ற அங்குராப்பண வைபவத்திற்கு தலைமை தாங்கி உரையாற்றுகையில் கிளிநொச்சி மாவட்ட தலைமைக் காரியாலய உதவி அரசாங்க அதிபரும் குருகுல இயக்குநர் சபைத் தலைவருமான திரு. க. துரைராசா குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலய அரங்கில் நடைபெற்ற இவ்வைபவத்தில்ஆத்ம ஜோதி மத்தையா அருளுரையாற்றினர்.

இந்து இளைஞர் மன்ற தலைவராக திரு. வீரசிங்கமும், செயலாளராக திரு. சிவதட்சணமூர்த்தியும், பொருளாளராக திரு. தங்கராசாவும செயற்குழு ஒன்றும் தெரிவானது. (83)

---

## உடற்பயிற்சி போட்டி

(நெல்லியடி)

வடமராட்சிப்பகுதியிலுள்ள கொத்தணிப் பாடசாலை மட்டத்திலான உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் நடைபெறவுள்ள இப்போட்டிக்கு கோட்டக்கல்வி அதிகாரி திரு. பொ. வீரபத்திரன் தலைமை வகிப்பார். (55)

## மணிவாக்கு

''அறிவில்லாதவன் ஆண்டில் அதிகமானவனுயினும், மகனுக்குச் சமானமானவன். ஆண்டிற குறைந்தவனுயினும் அறிவால் மேம்பட்டவன தந்தைக்கு சமானமாவான்.'' — மநுதர்ம நீதி

# நமது நோக்கு

## பாடசாலைகளில் விவசாயக் கல்வி

எமது நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு விவசாயம். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாநில மக்களின் எதிர்காலமே விவசாயத்தில்தான் தங்கியுள்ளது.

எனவே, கல்வி வளர்ச்சியிற் கவனம் செலுத்துபவர்கள், விவசாயக் கல்விக்கு முன்னுரிமை கொடுப்பதிலும், ஆக்கபூர்வமான முறையில் அதன் வளர்ச்சிக்குத் திட்டமிடலும் அவசியமாகின்றது.

இந்த வேளையில், புதிய விவசாயக் கல்வித்திட்டம் அமுலாகப் போகின்றது எனச் செய்திகள் வந்துள்ளன.

இது விவசாய வளர்ச்சிச் சபையின் (Agricultural Development Authority) கூட்டு முயற்சியோடு திட்டமிடப்பட்டுள்ளது. விவசாய, கல்வி அமைச்சர்கள் இருவரும் இணைந்து இத்திட்டததிலே செயற்படுகிறுர்கள்.

பாடசாலைக் காணிகளின் உச்சப் பயன்பாட்டினையும், விவசாயச் செய்முறை அனுபவம் மாணுக்கர்களுக்குக் கிடைப்பதை உறுதி செய்வதையும் முக்கிய நோக்கங்களிற் சிலவாக இத்திட்டம் கொண்டுள்ளது.

சில நகரப்புறப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளில் விவசாயத்திற்கென நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த விவசாயக் காணிகள் உரிய முறையிற் பயன்படுத்தப்படுகின்றனவா? மாணுக்கர் அந்தக் காணிகளுக்கு நேரிலே சென்று பயிரிடும் முறையிற் பயிற்சி பெறுகிறுர்களா?

இப்படியான கேள்விகளை நாட்டின் அசாதாரண சூழ்நிலைக் காலத்திற் கேட்கமுடியாதுதான்!

ஆனுல், அமைதிச் சூழ்நிலை உருவாகி, பாடசாலைகள் நேரசூசிப்படி ஒழுங்காக நடைபெறுவதை உறுதிசெய்துவரும் இந்த வேளையில் விவசாயச் செய்முறைப் பயிற்சி பற்றிச் சிந்திக்கவேண்டாமா?

போதிய நிலமின்மை, நீர் பற்ருக்குறை, விவசாய ஆசிரியர் தட்டுப்பாடு, மாணுக்கர் டியூசனுக்கு ஓடுதல் போன்ற வழமையான வாதங்கள் முன்வைக்கப்படுவதையும் நாம் அறியாமலில்லை.

ஆனுல், உள்ள ஆசிரிய, நிலவளங்களின் உச்சப் பயன்பாடு உறுதி செய்யப்பட வேண்டும்.

பாடசாலையின் விவசாயப்பயிற்சி மாணுக்கரின் உடல், உள வளர்ச்சிக்கு உறுதுணையாகும் என்பதை மறக்க முடியுமா?

நாட்டிலே விவசாயம் பற்றிய சீரிய மனப்பாங்கு வளர்க்கப்பட்டிருக்கவில்லை என்பதை வருத்தத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேம். அலுவலகத் தொழில்களுக்கு என ஆலாய்ப் பறப்பதும் வெளிநாடுகளுக்குப் படை எடுப்பதும் விவசாயம் பற்றிய மனப்பாங்குச் சீரின்மை நோயின் அறிகுறிகள் அல்லவா?

முழு நேர வேலை கிடைக்காத பலர், பகுதி நேர வேலை செய்து ஓரளவு வருமானம் பெற்று வருகின்றனர். பாடசாலை மட்டத்திலே விவசாயப் பயிற்சி பெற்றிருந்தால், வீட்டுத் தோட்டம், தேனீ வளர்ப்பு, கால் நடை வளர்ப்பு போன்ற பிற வருமானம் ஈட்டும் பகுதிநேர வேலைகட்கு எவ்வளவோ உதவும் என்பசை நாம் மறந்துவிடக்கூடாது.

விவசாயத்திலே புதிய ஆய்வுகளும், தொழில் நுட்பங்களும் விரைவாகப் பரவுவதற்கும் இத்திட்டம் உதவுமென எதிர்பார்க்கிறேம்.

## தவக்கால நற்சிந்தனை

### இறைபராமரிப்பு

''பெற்ற தாய்க்கு அன்பு வற்றிப் போகுமா? பால்குடிக்கும் குழந்தையை அவள் மறப்பதுண்டோ? அப்படியே பெற்றவள் தன் பிள்ளையை மறந்து விட்டாலும் நாம் உன்னை ஒருபோதும் மறக்க மாட்டோம். இதோ, நம் கைகளில் உன்னைப் பொறித்துள்ளோம்'' என்று இசையாள் இறைவாக்கினர் மூலமாக இறைவன் கூறுகின்றுர் நாம் எவ்விதம் தான் இறைவனை விட்டுப் பிரிந்து தூர ஓடினுலும் அவர் எம்மைத் தேடி ஓடி வருகின்றுர். இறைவன் எம் ஒவ்வொருவரையும் தம் கரத்திலே ஏந்தியவராக எம்மைக் காத்து வருகின்றுர். இன்பமான வேளைகளில் இறைவனை மறந்து விடுகின்றேம். அதேவேளையில் துன்பமான வேளைகளில் அவரை நினைந்து மனம் நொந்து கொள்கிறேம். இன்பமான வேளைகளில் எம்முடன் நடந்து வரும் இறைவன் துன்பமான வேளைகளில் எமமைத் தன் தோள் மேலே சுமந்து வருகிறுர். ஏனெனில் எவ்வித கவலையற்று இருக்கும் வானத்துப் பறவைகளுக்கு உணவளிக்கும் இறைவன் ஆடியசைந்து வளரும் வயல் வெளிப்புல்லை அழகுற அமைக்கும் இறைவன் எமக்குத் தேவையானவற்றைத் தருவார். எம்மைப் பாதுகாப்பார். உன் தாய் வயிற்றில் உன்னை உருவாக்கு முன்பே நாம் உன்னை அறிந்திருந்தோம். கருப்பையிலிருந்து வெளிப்படுமுன்பே உன்னை நாம் அர்ச்சித்திருக்கின்றேம். மக்களினங்களுக்கு இறைவாக்கினராக ஏற்படுத்தினேம் என்ற ஏரேமியாசின் இறைவார்த்தையில் நம்பிக்கை கொண்டு கவலை மறந்து வாழக் கற்றுக்கொள்வோம்.

அருட்திரு அன்ரனி பாலா

## சமரச சன்மார்க்கநிலை போதித்த சுத்தானந்த பாரதியார் மறைவு

## தமிழுக்கும் ஆன்மீகத்திற்கும் பேரிழப்பு!

''யாழின் கதை எப்படி இருந்தாலும் யாழினும் இனிய தமிழ் யாழ்ப்பாணத் தமிழ்; அத்தமிழ் எனக்கு இன்பமளிக்கும்!''— இப்படிக் கூறியவர் யோகி சுத்தானந்த பாரதியார்.

சுப்பிரமணிய பாரதியாரைப் போல, பாரதிதாசன் போல, புதுவையில் வாழ்ந்தவர் சுத்தானந்தர்.

''நாவலர் பெருமான்!'' என்ற தலைப்பில் இவர் எழுதிய நூல் பல வரலாற்று உண்மைகளை உள்ளடக்கியது. பல அரிய விஷயங்களையும் எளிய தமிழில் இதிலே சேர்த்திருக்கிறுர்.

இவர் சர்வமதங்களையும் போற்றிப் புகழ்ந்ததோடு, சமரச சன்மார்க்கத்தைப் போதிக்க பல சிறிய நூல்களை ஆக்கியவர்.

எளிமையாக, சிறிய வசனங்களாக, உணர்ச்சியையும் சிந்தனையையும் தூண்டுபவைகளாக இவர் தமிழ்நடை இருந்தது.

''மனதை அலையவிடாது உள்ளே நிறுத்தல் தியானம். மனம் உள்ளே ஆழ்ந்து சென்ருல் ஒருமைப்படும்; அந்த ஒருமையில் தன்னை உணரலாம். தலைவனை உணரலாம்!''—இது தியானமாலை என்ற நூலில் அறிமுக உரையில் அவர் தியானத்தை விளக்கியது.

இவர் பன்மொழிப் புலவர். பிரெஞ்சு நாவலான லா. மிசரபிள்ஸ் (Les Miserables) என்ற புகழ்பெற்ற பிரெஞ்சு நாவலை ''ஏழைபடும் பாடு'' என அழகாக மொழிபெயர்த்து எழுதினுர்.

அதேதலைப்பில் சினிமாப்படமாகி அக்கதை தமிழ்நாட்டில் பலரைக் கவர்ந்ததை மறப்பதற்கில்லை

ஆங்கிலத்திலும் சிறிய நூல்களை ஆக்கி, ஆன்மீகததை மேலைநாட்டவரும் அறிய வாய்ப்பளித்தவர்களில் ஒருவரானுர்.

ருஷ்யாவிற்கும் சென்றுவந்தவர். இலங்கையிலும் பல தடவைகள் வந்து அருளுரை வழங்கியவர்.

நீண்டகாலம் மௌனவிரதம் பூண்டிருந்தார். அக்காலத்தில் அவர் இயற்றிய பாரத சக்தி ஐந்து காண்டங்கள்பற்றி ஒரு விமர்சகர் கூற்று என்ன?

''இது கவிக்குக் கவி; கலைக்குக் கலை; தமிழுக்கு வெற்றி மகுடம்; உலக மகான்களின் உள்ளத்துடிப்பு: தெளிந்த ஆவேச அருவி நடை''

எல்லா மதத்தினரும், நாட்டினரும் ஏற்கவேண்டியபொருளடங்கிய நூலென வ. வே. சு. ஐயர் குறிப்பிட்டிருந்தார்.

''திருக்குறள் இன்பம்'', ''பகவத் கீதையின் தமிழுரை'' போன்றவை. குறிப்பிடக்கூடிய அரிய நூல்களை இவர் ஆக்கியிருக்கிறுர்.

இவர் எமக்குத் தந்த ஆலோசனை தான் என்ன?

''வள்ளுவர் எளிமையும், அப்பரின் அன்புறுதியும், நாவலர் நாவிலும், திருமாவளவன் ஆட்சித்திறனும், நெடுஞ்செழியன் வீரமும், மகாத்மாவின் மெய்யுணர்வும், மார்க்கோனியின் காண்புலமையும், எடிசனின் விடாமுயற்சியும் பீமனின் பலமும் சேர்ந்து உங்கள் வாழ்வு நிறைவு எய்துக!''

மு. சி.

## இஸ்லாமிய சிந்தனை

கலிமா என்னும் அரபுப் பதம் தமிழிலே சொல் எனப்படும் தனிவாக்கியம், தொடர் வாக்கியம் என்ற பொருள்களிலும் அதனை உபபோகிப்பது வழக்கம்.

கலிமாக்களை ஐந்தாகப் பிரித்துத் தனித்தனி பெயரிட்டுள்ளனர் பெரியோர். ஐந்து கலிமாக்களில் முதல் நான்கும், குறிப்பிட்ட சொற்களைக் கொண்டதாகவே பலஹதீஸ்களில் வந்திருக்கின்றன.

ஐந்தாவது கலிமா ஒரு து ஆவாகும். ஐந்தாவது கலிமாவில் ஒரு பகுதி ஹதீஸில் வந்திருக்கிறது.

எம். பஷீர்

## சமயத்தை விளங்க வேண்டாமா?

**(1) முருகனுக்கு சேவல் கொடியாகவும், மயில் வாகனமாகவும் வந்ததன் காரணம் என்ன?**

சூரபன்மன் முருகப்பெருமானுடன் போர் புரிந்தான்; தந்திரங்கள் பல செய்தான்; மாயைகள் பல வகுத்தான்; உருவங்கள் பல எடுத்துப் போராடினுன். முருகனும் தொடர்ந்து போராடி அவனைத் தளர்வுறச் செய்தார். அவனுக்கு உணர்ச்சியைக் கொடுத்து தம் திருப்பெருவடிவைக் காட்டினுர்.

ஆனுல் ஆணவம் நிறைந்த அவனே மீண்டும் போர் செய்யவே துணிந்தான். ஈற்றில் மாயவடிவம் கொண்டு நடுக்கடலில் மாமரமாக நின்றுன். அப்பொழுது முருகன் தம்வேலாயுதத்தைச் செலுத்த அம்மரம் இருபிளவாகிச் சேவலும், மயிலுமான உருப்பெற்று அவரிடம் வந்தன.

முருகப்பெருமான் சேவலைக் கொடியாகவும், மயிலைத் தம் வாகனமாகவும் ஏற்றுக்கொண்டார். ஞான சக்தியாகிய வேலின் தாக்கத்தால் ஆணவ மலம் வலுவிழந்து, ஆன்மா பரம்பொருளின் திருவடிகளை அடைந்தது என்பதே இதன்பொருள்.

**(2) அபிடேகமாவது யாது?**

**இதற்குரிய பொருள் எவை?**

அபிடேகமாவது விதிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டு திருவுருவத்தை நீராட்டலாகும்.

பொருள்கள்:- பால், தயிர், நெய், இளநீர், வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், தோடம்பழம், எலுமிச்சம்பழம், விளாம்பழம், தேன், சர்க்கரை, சந்தனம், குங்குமம், கஸ்தூரி, கோரோசனை, அத்தர், பன்னீர், மலர், பட்டாடை முதலியன.

**(3) திருநீற்றின் உட்பொருள் என்ன?**

இங்கே நீருக்க எடுத்துக்கொள்ளும் சாணம் ஆன்மாவையும், சாணத்தில் உள்ள அழுச்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும், நெருப்பு திருவருளையும், எரித்தல் திருவருள் பதிதலையும், எரித்தபின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் என்பர் பெரியோர்.

திருநீறு ஒரு கிருமி நீக்கும் பொருளாக தற்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ருஷ்யா போன்ற நாடுகளிற் கூட வீபூதி பற்றி விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டது.

தொகுப்பு: சி. கலையரசி

## யூனிசெப் உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளில் நடைபெறும் முறைசாராக் கல்விப்பயிற்சி நெறி சம்பந்தமான வழிகாட்டி நூலகளை அச்சிட யுனிசெப் நிறுவனம் உடனடி நிதியுதவி வழங்கியுள்ளது.

அறுபது பயிற்சி நெறிகளுக்கும் தனித்தனியான வழிகாட்டி நூல்கள் ஒவ்வொன்றும் ஐநூறு பிரதிகளை அச்சிடும் பணி ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளதாக இத்துறைக்குப் பொறுப்பான தொழில் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் தெரிவித்தார்.

(12)

## பலதும் பத்தும்

### அந்த ஸ்தூபி

இங்கிலாந்திலே கட்டடக் கலையிலே ஒரு பரபரப்பு; புதிய பாணியிலே பல சட்டடங்கள் உருவாகி வருகின்றன அல்லவா?

இதனை இளவரசர் சார்ள்ஸ் கண்டித்திருக்கிறுர். இளவரசரல்லவா...? எனவே பலரது கவனத்தையும் கவர்ந்திருக்கின்றது. கட்டடக்கலைஞர்களுக்கே ஒரு சவாலாகிவிட்டது.

பிரித்தானியர் கட்டட நிர்மாணப் பொறியியலாளர் சங்கத்தலைவர் எம். ஹற்சின்சன் தற்காலப் பாணிகளை ஆதரித்து ஒரு நூலே எழுதிவிட்டார்!

இளவரசர் குற்றச்சாட்டு என்ன? வரலாற்றுப் பின்னணி ஒதுக்கப்பட்டு வருகின்றதாம்!

இங்கே...? பிரச்சனை எழ நியாயமில்லைத்தான்! பாரம்பரியக் கலாச்சாரம் உரிய இடம் பெறுகின்றது.

கோண்டாவிலில்மாவீரர் ஸ்தூபி ஒன்று உருவாகின்றதல்லவா?

அதிலே திராவிடச் சிற்பக்கலை பளிச்சிடுகிறது. சோழன் கொடியிற் காணப்படும் சின்னம் நான்கு முனைகளில் இருக்கின்றது.

ஆனுல், அதன் உச்சியிலிருக்கும் கருவி...!

'சேரன் கொடியில் ஓர் கருவியில்லையா?''... இப்படிக்கேட்டார். ஓர் அன்பர். அதற்குப் பதிலாக புதிய கருவி இடம்பெற்றிருக்கின்றது.

புதுமையும் பழமையும் இணைகின்றன!

வாணி

# "பற்றில் ஒவ் த கோல்ஸ்" 73-வது கிரிக்கெட் போட்டி

## இன்றும் நாளையும் நடைபெறும்

(நமது விளையாட்டு நிருபர் "தேவா")

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்லூரிகளிடையே நடைபெறும், மாபெரும் கிரிக்கெட் போட்டிகளில் ஒன்ருன, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெறும் 73-வது வருடாந்த "பற்றில் ஒவ்த கோல்ஸ்" கிரிக்கெட் போட்டி இன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

கடந்த பல வருடங்களாக இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெறும் இப்போட்டி எத்தரப்பினருக்கும் வெற்றி தோல்வியின்றியே முடிவடைந்துள்ளது ஆனல் இவ்வருடம் இப்போட்டியில் சற்று மாறுதல் ஏற்படலாம் என்று கிரிக்கெட் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்ருர்கள்.

யாழ்ப்பாணக் கல்லூரியைவிட, சென். பற்றிக்ஸ் கல்லூரி இம்முறை பலம்கூடிய கோஷ்டியாகவே திகழ்கின்றது. இக்கல்லூரி இம்முறை கலந்து கொண்ட மொத்தம் நாலு போட்டிகளிலும் தோல்வியடையாத நிலையில் இருந்து வருகின்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி இதுவரை மொத்தம் ஐந்து போட்டிகளில் கலந்து கொண்டு ஒரு போட்டியில், இன்னிங்ஸ் வெற்றியும்; இருபோட்டிகளில் வெற்றி – தோல்வியின்றியும், இருபோட்டிகளில் தோல்வியும் அடைந்துள்ளது.

யாழ்ப்பாணக்கல்லூரி தோல்வியடைந்த, யாழ் இந்துக் கல்லூரியையும், சென். ஜோன்ஸ் கல்லூரியையும், சென். பற்றிக்ஸ் கல்லூரி மிகச் சாதுரியமாகச் சமாளித்தது குறிப்பிடத்தக்கது.

### சென். பற்றிக்ஸ் கோஷ்டி

இம்முறை சென். பற்றிக்ஸ் கோஷ்டிக்கு ஏ. ஜே. ஐஸ்ரீன் தலைமை தாங்குகின்ருர். இவர் கிரிக்கெட் ஆட்டத்தில் மூன்று வருட அனுபவம் கொண்டவர். இவர் வலது கையால் துடுப்பெடுத்தாடுவதிலும், நடுத்தர வேகத்தில் பந்து வீசுவதிலும், வேகமாக வரும் பந்துகளை மிகச் சாதூரியமாக தடுப்பதிலும் சிறந்தவர்.

இக்கோஷ்டியில் அங்கம் வகிக்கும் மற்றைய வீரர்களின் பெயர்கள் வருமாறு:

கே. ஜே. இம்மானுவேல் (உப-தலைவர்), எஸ். யூலியன், ஜே. பி. பாஸ்கரன், ஜே. வில்ரன், ஜே. விஜேந்திரா, ஜே. ஆர். வன்னியசிங்சி, எம். என்.ஜி. எஸ். அன்ரனிப்பிள்ளை எஸ். அகிலன், ஏ. ஐ. ஆர். இன்பசோதி பி. அன்ரனிப்பிள்ளை, எஸ். சுரேஷ், எஸ். அன்ரனிக்குயீன், எஸ். ஏபன், ஈ. ஏறீக்.

### யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு இம்முறை எஸ். விஜனதன தலைமை தாங்குகின்ருர். கிரிக்கெட் உலகில் மூன்று வருட அனுபவம்கொண்டவர். வலது கையால் துடுப்பெடுத்தாடி வேகமாக ஓட்டங்களை சேகரிப்பதில் வல்லவர். இவர்தான் இக்கோஷ்டியின் விக்கெட் காப்பாளரும்கூட.

இக்கோஷ்டியில் அங்கம் வகிக்கும் மற்றைய வீரர்களின் பெயர்கள் வருமாறு:-

எஸ். ஜெனர்த்தனன் (உப தலைவர்), எஸ். செந்தில்குமரன், எம். பாஸ்கரன், என் ஜென்ஸன், பி. உத்தயசீலன். ரி. வீரசுதன், ஏ. பாரத், எஸ். கிறிவ்ராஜா, எஸ். ரவீந்திரன், பி. உதயகுமார், எவ் நிக்ஸன், எஸ். மோகன்பாவு, ரி. நடேந்திரன், எஸ். ஜெயா அன்ரன்.

### கடந்தகாலப் போட்டிகள்

இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் இதுவரை காலமும் நடைபெற்ற போட்டிகளில், சென். பற்றிக்ஸ் கல்லூரி 24 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளது. யாழ்ப்பாணக் கல்லூரி 15 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது. 19 போட்டிகள் வெற்றி-தோல்வியின்றி முடிவுற்றுள்ளன.

### ஆட்ட நேரங்கள்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு போட்டி ஆரம்பமாகி மாலை 5.30க்கு முடிவடையும்

நாளை காலை 9-00க்கு போட்டி ஆரம்பமாகி மாலை 5-30 மணிக்கு முடிவடையும்.


இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், யாழ்ப்பாணக் கல்லூரியினர் மிகச்சிறப்பாகசெய்துள்ளதுடன், கடந்த இருவருடங்களாக இந்திய அமைதிப்படையினரால் சீர்குலைக்கப்பட்ட இக்கல்லூரியின் மைதானத்தை மிகக் குறுகிய காலத்தில் சீர்செய்து, இப்போட்டியைநடாத்தவிருப்பது குறிப்பிடத்தக்கது

இப்போட்டிக்கு திரு. சி. நந்தகுமார், திரு. எஸ். விமலதாஸ் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றுவார்கள்.

சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு விளையாட்டுப் பொறுப்பாசிரியராக திரு. எஸ். எவ். சேவியரும், பயிற்சியாளராக திரு. எஸ். சகாயராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு. விளையாட்டுப் பொறுப்பாசிரியராக திரு. ரி. ஆனந்தரட்ணமும், பயிற்சியாளராக திரு. ரி. நித்தியரட்ணமும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

(வி)



சென். பற்றிக்ஸ் கல்லூரி



யாழ்ப்பாணக் கல்லூரி

## தென்மராட்சி பாடசாலைகளுக்கு வீரவேங்கை வெற்றிக் கேடயம்!

(மட்டுவில்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு, தென்மராட்சி தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னுள் அரசியல் பொறுப்பாளர் நகுலன் நினைவாக வீரவேங்கை வெற்றிக்கேடயம் ஒன்று மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. என். ரஞ்சனுல் வழங்கப்பட்டது.

உசன் மகாவித்தியாலயத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவ அமைப்பு வீரவேங்கை வெற்றிக்கேடயத்தை வழங்கியது

இதுபற்றி மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. ரஞ்சன் குறிப்பிடுகையில் உசன் மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்றவரும், மட்டக்களப்பில் ஸ்ரீலங்கா ராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் உயிரிழந்தவருமான லெப்டினன்ட் பயஸ், சதீஸ் மற்றும் வீரவேங்கைகளான அங்கிள், மாதவன், சாம் ஆகியோரின் நினைவாகவும் வீரவேங்கைகள் வெற்றிக்கேடயங்களை வழங்குவதாகத் தெரிவித்தார்.

கிளாலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இல்ல விளையாட்டு போட்டிகளை யொட்டி அப்பாடசாலைகு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஒரு வீரவேங்கை வெற்றிக் கேடயத்தை வழங்கியது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பளை பிராந்தியப் பொறுப்பாளர் காப்டன் சிவாவின் வீர மரணத்தையொட்டி அவரின் நினைவாக இந்த வீரவேங்கை கேடயம் இப்பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

எழுதுமட்டுவாள் தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகளை முன்னிட்டு அப்பகுதி வீரவேங்கைகளான கருணு 2-வது லெப்டினன்ட் அப்பன், ஜெகன் ஆகியோர் நினைவாக அப்பகுதி கிராமப் பிரமுகர்கள் இணைந்து மூன்று வெற்றிக் கேடயங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

மட்டுவில் மகாவித்தியாலயத்தின் மெய்ச்செயல திறன் போட்டியில் அருணுசலஇல்லம் சாம்பியன் கேடயத்தையும், வீரவேங்கை வெற்றிக்கேடயத்தையும் தட்டிக்கொண்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, உயிரிழந்த வீரவேங்கைகள், மாணவர், பொதுமக்கள் நினைவாக ஒரு கேடயத்தை மாணர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. என். ரஞ்சன் அன்பளிப்புச் செய்திருந்தார். இந்தக் கேடயத்தையும் அருணுசலம் இல்லமே தட்டிக்கொண்டது. (82)

## இளைஞர்களுக்கு பயிற்சிநெறி

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில ஐக்கிய நாடுகள் அகதிகள் புனர்வாழ்வு உயர் ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் தொலைக் காட்சிப்பெட்டி திருத்துதல், வானெலிப்பெட்டி திருத்துதல் பயிற்சி நெறியொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் 17 வயதுக்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட வயதுடைய இளைஞர்கள் க. பொ. த. (சாதாரண தர) வகுப்பில் படித்திருப்பின் இந்தப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இப்பயிற்சிநெறி ஆறு மாத காலம் நடைபெறும் என்றும், பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படுமென்றும், இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 15ம் திகதிக்கு முன்னர் இளைஞர் சேவை அதிகாரி, உதவி அரசாங்க அதிபர் பணிமனை, சண்டிலிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

## மின்மானிகள் பொருத்துதல்

(பண்டத்தரிப்பு)

கட்டிடங்களுக்குள் இருக்கும் மின்மானிகள் கட்டிடங்களுக்கு வெளியில் பொருத்தப்படவேண்டும் என்று இலங்கை மின்சாரசபை சுற்று நிருபம் ஒன்றை விடுத்துள்ளது.

இதற்கிணங்க பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பகுதியில் கட்டிடங்களுக்குள் பொருத்தப்பட்டிருக்கும் மின்மானிகளைக் கட்டிடத்திற்கு வெளியில் பொருத்தும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (72)

# நிதர்சனம் ஒளிபரப்பு தென்மராட்சியில் ஆரம்பம்

(மட்டுவில்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப் பிரிவில் நிதர்சனம் தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவைப்பிரிவு ஒன்றினை பரீட்சாத்தமாக ஆரம்பித்துள்ளது.

மேற்படி நிதர்சனம் தொலைக்காட்சிச் சேவையினூல் பொதுமக்களுடன் அவ்வப்பொழுது தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இதுஒருவாய்ப்பாக அமையும் என்று அமைப்பாளர் கருதுகிறார்கள்.

மேற்படிநிதர்சனம்தொலைக்காட்சி ஒளிபரப்பு சேவை பிரதி ஞாயிறு தோறும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (82)

நாளை திறக்கப்படும்

# கிளிநொச்சி கலை கலாசார அவையின் நுண்கலைக்கல்லூரி

## வன்னிப்பிரதேசத்திற்கு ஒரு வரப்பிரசாதம்

(கே. வி. கே. திருலோகமூர்த்தி)

தமிழீழ மண்ணின் பாரம்பரிய கலைத்துறை வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு பல லட்சம் ரூபா செலவில் கிளிநொச்சியில் மாவட்ட கலாச்சார அவையினரால் நுண்கலைக் கல்லூரி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு நாளை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா) திறந்து வைக்கிறார்.

இக் கல்லூரி திறக்கப்படுவதன் மூலம் வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் நுண்கலைக் கல்லூரிஒன்று இல்லாத நீண்டகாலக் குறை நிவர்த்தியாகிறது

இக்கல்லூரி பற்றியும் கலாச்சாரத் துறைக்கு ஆற்ற உள்ள பணிகள் பற்றியும் அறிந்து அக் கல்லூரி அமைந்துள்ள பரவிப்பாஞ்சானிற்கு சென்றபோது அங்கு ஆண்கள், பெண்கள், சிறுவர்கள். மாணவர்கள், வயோதிபர்கள் என்று பேதம் இல்லாமல் கல்லூரி நிர்மாணப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். சுவருக்கு வண்ண வண்ணமாக மை பூசுவது, புதிய கலைக் கூடங்களை அமைப்பது உள்ளிட்டு பலவிதபணிகளை அவர்கள் மேற்கொண்டிருந்தினர். மிகவும் பாழடைந்து கவனிப்பாரற்றுக் கிடந்த ஒரு கட்டிடம் அழகு ஓவியமாக நிர்மாணம் பெற்றுக்கொண்டிருந்தது.

கிளிநொச்சி மண்ணிற்கே சொந்தமான பல கலைஞர்கள், எழுத்தாளர்களும் பலவித பணிகளை செய்து கொண்டிருந்தனர்.

இந்தப் பணிகளை எல்லாம் முடுக்கிவிட்டு தானும் அங்கு வேலை செய்து கொண்டிருப்போருடன் ஒருவராக இருந்து வேலைகளை செய்து கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலை, கலாச்சாரத்துறை பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை என்னை அன்புடன் வரவேற்று இக்கல்லூரியை காண்பித்து உரையாடினார்.

பாரம்பரிய தமிழர் கலைகளை மீட்டெடுப்பது, புதிய வடிவங்களை உருவாக்குவது, பிற வடிவ கலைகளை எங்களுக்கு அமைவாக உருவாக்குவது ஆகிய நோக்கங்களை இக்கல்லூரியும் கலாச்சார அவையும் கொண்டு விளங்குகிறது.

எட்டு மாவட்டங்களில் கலாச்சார அவை கட்டி எழுப்பப்படுகிறது என்றும் இந்த வகையில் அமையும் முதலாவது கல்லூரி இதுவாகும் என்றும் குறிப்பிட்ட புதுவை இரத்தினதுரை மேலும் தெரிவித்தாவது; வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகின்ற நமது தமிழீழ மண்ணின் கலாச்சாரத்திற்கு ஒவ்வாத நம் இளைஞர், யுவதிகளை கலாச்சாரச் சீரழிவிற்கு இட்டுச் செல்கின்ற திரைப்படங்களையும் சஞ்சிகைகளையும் காலம் காலமாக பார்த்து ரசித்த நம்மக்களிற்கு உடனடியாக கலாச்சாரத்துறையில் ஒரு விடிவுகாணவேண்டும் நம்மண்ணில கலை கலாச்சாரத்துறை பேணப்பட்டு அதற்கு புத்தூக்கம் அளிக்கவேண்டும். கலாச்சாரசீரழிவில் இருந்து மண்விடுபடவேண்டும் என்ற நோக்கில் கலாச்சாரப்பேரவையும், அவின் கலைக்கல்லூரியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதிமான வாத்தியக் கருவிகள் கல்லூரிக்கென தருவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வர்த்தகர் சங்கம், சர்வோதயம், தென் இந்திய திருச்சபை முதலான பொது ஸ்தாபனங்களும் பொதுமக்களும்தாராளமனத்துடன் நிதி மற்றும் சிரமதானப் பணிகளை செய்துள்ளனர். பாடசாலை மாணவர்களும் இத்திட்டம் நிறைவு பெற உதவியுள்ளனர்.

கல்லூரியின் ஒரு அங்கமாக வெளியீட்டகம் உள்ளது. சிறுகதைத்தொகுதி ஒன்றும் கவிதைத் தொகுதி ஒன்றும் வெளியிட ஏற்பாடாகியுள்ளது. கல்லூரி இயக்குநர் சபையில் கல்வித்துறையைச் சார்ந்தோரும் வேறு சில சேவை மனப்பன்மை உள்ளோரும் உள்ளனர்.

சமுதாய பண்பாட்டு முரணான படைப்புக்களை தற்காலிகமாக தடைசெய்துள்ளோம்.

இக்கவின் கலைக் கல்லூரி ஏனைய கலைக் கல்லூரிகளுக்குச் சமமாகப் பலவித வசதிகளைக் கொண்டு விளங்குகிறது. இக் கல்லூரியில் சேர்ந்து பயில இரண்டாயிரம் மாணவர்கள் இதுவரை விண்ணப்பித்துள்ளனர் வறிய மாணவர்களுக்கு இலவச போதனைகள் அளிக்கவும் ஏற்பாடாகியுள்ளது

கிளிநொச்சி மாவட்ட கலாசாரப் பேரவைக்கு உதவ இதுவரை இருபத்தாறு கிராமியக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இருபத்தாறு இணைப்பாளர்களும் உள்ளனர். அத்துடன் எட்டு மாவட்டங்களில் எட்டு கலாசார வெளிக்கள உத்தியோகத்தர்களும் தெரிவாகியுள்ளனர். நாளை திறக்கப்படும் இக்கவின்கலைக் கல்லூரி சுதந்திரமாக இயங்கவும் வழி செய்யப்பட்டுள்ளது என்றும் புதுவை இரத்தினதுரை கூறினார். (83)

# தென்மராட்சியில் மறைந்து வாழும் இரு தேசவிரோதிகளைப் பிடித்துத்தருமாறு புலிகள் மக்களிடம் கோரிக்கை

(மட்டுவில்)

கொலை, கொள்ளைகளில் ஈடுபடும் தேசவிரோதிகள் இருவர், தென்மராட்சிப் பகுதியில் தலைமறைவாக மறைந்து வாழ்வதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இது தொடர்பாகத் தென்மராட்சிப் பகுதிப் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்கும்படியும் இந்த இருவரையும் இனங்கண்டு பிடித்துத் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கும்படி சாவகச்சேரி தமிழீழ விடுதலைப் புலிகள் ஒலிபெருக்கி மூலம் தென்மராட்சிப் பகுதி மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் இந்தத் தேசத்துரோகிகள் இருவரையும் மக்கள் இனங்கண்டு பிடித்துத் தமக்கு அருகாமையிலுள்ள விடுதலைப் புலிகள் முகாமில் ஒப்படைக்க வேண்டும் அல்லது தகவல் கொடுக்கவேண்டும் என்றும் பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர், (82)

# சிதம்பராக் கல்லூரி மீண்டும் சொந்தக் கட்டிடத்தில்

(வடமராட்சி)

சிதம்பரக்கல்லூரி மீண்டும் வல்வையில் உள்ள சொந்தக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த ஸ்ரீ லங்கா இராணுவம் தாககுதலின் போது பெரும் சேதத்திற்குள்ளான மேற்படி கல்லூரியின் கட்டடங்களை புலிகள் புனரமைப்புச் செய்தனர். இக்கட்டங்கள் புனரமைக்கப்பட்டபின் கடந்த 6ம் திகதி மேற்படி கல்லூரியில் சகல வகுப்புக்களும் இயங்கத் தொடங்கியுள்ளன.

இக்கல்லூரியில் இயங்கி வந்த ஸ்ரீ லங்கா பொலிஸ் நிலையம் இடம் பெயர்ந்து தனியார் வீட்டில் இயங்கி வருகின்றது

கல்லூரிக்குச் சொந்தமான விளையாட்டு மைதானம் தற்போதும் ஸ்ரீ லங்கா இராணுவக் கட்டுப்பாட்டிலேயே உள்ளதால் மாணவர்களின் உடற்பயிற்சி விளையாட்டுத்துறை போன்றவை பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. என்பது குறிப்பிடத்தக்கது. (51)

# சுமையாக இருக்க விரும்பாதவர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வயது முதிர்ச்சி காரணமாக யாருக்கும் சுமையாக இருக்க விரும்பாத வயோதிபர் ஒருவர் நச்சுதிராவகம் அருந்தித தற்கொலை புரிந்தார்.

முரசுமோட்டைப்பகுதியில் நேற்று முன்தினமிடம் பெற்ற இச்சம்பவத்தில் எஸ். ஐயாத்துரை (வயது 80) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்தவராவர். ஆபத்தான நிலையில் இவர் உடன் யாழ். ஆஸ்பததிரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டிருக்கையில் அங்குமரணமானூர்

மரணவிசாரணை முடிவில் தற்கொலை எனத்தீர்பளிக்கப்பட்டு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

# ஆலயம் புனரமைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இராணுவ முகாமிற்குள் அகப்பட்டு, சீரழிந்த பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகர் தேவஸ்தானத்தை புனருத்தாரணம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் முகாமிட்ட இந்திய இராணுவம் முகாமை விட்டு வெளியேறிய பின்னரே இவ் ஆலயத்திறகுப் பக்தர்கள் செல்லக்கூடிய நிலை ஏற்பட்டது.

ஆலய சித்திரத் தேர் தீக்கிரையாக்கப்பட்டுவிட்டது. ஆலயத்லிருந்த கிருஷ்ணர் ராதா ருக்மணி விக்கிரகங்கள் உட்படபல சிலைகள் மற்றுப் பொருள்கள் காணமல்போய் விட்டன மடங்கள், மண்டபங்கள், கூரைகள், தூபிகள் முற்றுகச் சேதமடைந்துவிட்டன ஆலய பஞ்சலோக எழுந்தருளி மூர்த்தி, தூபியின் இடிபாடுகளுக்கிடையில் பக்தர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆலய புனருத்தாரண முயற்சிகளை மேற்சொள்வதற்கென புனருத்தாரணசபை ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம், தலைவர்: கு நவரத்தினசாமி உப தலைவர்கள்: இரா. அருளானந்தம், பா கணேசலிங்கம் செயலாளர்: ஆ. பசுபதி உப செயலாளர்: ப. இரத்தினவேலாயுதம் பொருளாளர்; அ. நாகரத்தினம் உப பொருளாளர்: செ. இரத்தினவேல் அத்துடன் 8 பேர் கொண்ட செயற்குழுவும் தெரிவானது. [52)

# இராசி பலன்

வெள்ளிக்கிழமை
09 - 03 - 1990

மேடம்: கருத்து முரண்பாடு கலக்கம், பணவரவு, உறவினர் வருகை குடும்பக் கவலை

இடபம்: ஏமாற்றம் பொருளாதார கஷ்டம் பொருள் விரயம், தொழில் பாதிப்பு.

மிதுனம்: தொழில் லாபம், அறிஞர் சந்திப்பு குடும்ப மகிழ்ச்சி, பயணங்களால் நன்மை.

கடகம்: ரோகநிவர்த்தி, மனயாற்றம் சகோதரர் பகை குடும்பப் பிரிவு.

சிங்கம்: குடும்பசந்தோஷம், விருந்துண்ணல், தொழில் முயற்சி, கடமையுணர்வு.

கன்னி: தடுமாற்றம், பிறரால் ஏமாற்றப்படுதல், அதிகாரிகள் தொல்லை. குடும்பக் கவலை.

துலாம்: தொழில் லாபம், பிறர் உதவி. கடன்வசூல், குடும்பமகிழ்ச்சி, தரிசனம்.

விருச்சிகம்: தொழில் மாற்றம், வருமான அதிகரிப்பு

[7ம் பக்கம் பார்க்க)

# இளம் பெண் நஞ்சருந்தி மரணம்

(யாழ்ப்பாணம்)

தந்தையுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இளம் பெண் ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை புரிந்தார்.

நேற்று முன்தினம் மண்டைதீவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரி. வதனி என்ற 19 வயது யுவதி நஞ்சருந்தியதால் உடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு அவசர சிகிச்சைக் குட்படுத்திய நிலையில் நேற்று மரணமானர்

சடலம் மரண விசாரணையின்பின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (56)

# மன்னாரில்வயிற்றோட்டநோய் ஒரு குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

மன்னார்ப்பகுதியில் எருக்கலம்பிட்டி, உப்புக்குளம், பேசாலை, வங்காலை மன்னார்ப் பட்டினம் ஆகிய இடங்களில் குழந்தைகள் மத்தியில் வயிற்றோட்ட நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது

ஒருவார காலத்திற்குள் பரவத் தொடங்கிய இந்நோயினால் ஒரு குழந்தை பலியாகியுள்ளது. 10 குழந்தைகள் மன்னார் ஆஸ்பத்திரியிலும் 5 குழந்தைகள் தனியார் வைத்திய சாலையிலும் அனுமதிக்சப்பட்டுள்ளனர். அவர்களில் மன்னார் படடினத்தைச் சேர்ந்த அன்ரன் நீரஜா என்ற ஒன்றரை வயதுக்குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளது. (56)

# மாத்தயா திறந்துவைப்பார்

(நமது நிருபர்)

கிளிநொச்சியில் பல லட்ச ரூபா செலவில் நிர்மாணிக்கப் பட்டுள்ள நுண்கலைக் கல்லூரியை நாளை சனிக்கிழமை மாலை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்சள் முன்னணியின் தலைவர் திரு. கோபாலசாமி மகேந்திரராசா (மாத்தயா) திறந்து வைப்பார்

கிளிநொச்சி கலை கலாச்சார அவையால் இந்த நுண்கலைக் கல்லூரி அமைக்கப்படடுள்ளது. இத் திறப்பு விழா வைபவத்தில விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு. யோகரெத்தினம், யோகி, இம் முன்னணியின் வன்னி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஆர். சந்திரன், கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. கோபி ஆகியோர் உரையாற்றுவர்.

விடுதலைப் புலிகள் மக்சள் முன்னணியின் கலை, கலாச்சாரப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை இக் கல்லூரியை கிளிநொச்சி மாவட்டத்திற்கென வைபவ ரீதியாக அர்ப்பணம் செய்து வைப்பார்.

இதன்பின் கல்லூரி அமைந்துள்ள பரவிப்பாஞ்சானில் பொதுக்கூட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

தலைவர் திரு. மாத்தயாவும் ஏனைய முன்னணியின் முக்கியஸ்தர்களும் இக் கல்லூரியை திறந்து வைக்க வருவதை முன்னிட்டு கிளிநொச்சி நகர் விழாக் கோலம் பூண்டு உளது.

## உங்கள் பிரச்சனை என்ன?

**கேள்வி:** அறுபது வயதுவரை அரச சேவையில் தொடர்ந்து இருக்கலாம் என பத்திரிகையில் செய்தி வந்தது. 55 வயதுக்குப்பின் சேவை நீடிப்பு விண்ணப்பம் இல்லாமலேயே தொடர்ந்து சேவையாற்றலாமா?

எஸ். பூமலர், யாழ்ப்பாணம்.

**பதில்:** நாங்கள் யாழ். செயலகத்தாபனக் கிளையோடு தொடர்பு கொண்டோம். அப்படியான ஒரு சுற்றுநிருபம் தங்களுக்குக் கிடைக்கவில்லையென அவர்கள் கூறினார்கள்.

வழமை போன்று 55 வயதுக்குப் பின்பு ஒவ்வொரு வருடமும் விண்ணப்பிக்க வேண்டும் என்பதுதான் வழமையான நடைமுறை. (ம)

# பொது அறிவுப் போட்டி முடிவுகள்

(மட்டுவில்)

சாவகச்சேரி வடநகர் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான பொது அறிவுப் போட்டிகள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றன.

கொத்தணிச் செயலாளர் திரு. ம. சபாரத்தினத்தால் நெறிப்படுத்தப்பட்ட இப்பொது அறிவுப் போட்டிகளை ஆசிரியர் திரு. க. நடேசபிள்ளை நடத்தினார்.

இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டோரின் விபரம் வருமாறு:- முதற்பிரிவு சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி இ. சிவராதிகா, இரண்டாம் பிரிவு மா. உதயசூரியன், மூன்றும் பிரிவு செல்வி ச. தமயந்தி, நான்காம் பிரிவு மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி செ. சாரதாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் தொடர்ந்து யாழ். கோட்ட மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வார்கள். (82)

# தொலைக் கல்விப் பயிற்சி: தமிழில் பாடவிதானங்கள்

[நாவற்குழி]

தொலைக்கல்வி மூலம் பயிற்சி பெறுகின்ற ஆசிரிய மாணவர்களுக்கான பாடவிதானங்களும், கடந்தகால வினாப்பத்திரங்களும் தமிழில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அழகியல் பாடங்களான வரைதல், சங்கீதம், சித்திரம் ஆகியனவும் பௌதிக விஞ்ஞானம், உயிரியல் விஞ்ஞானம், உடற்கல்வி போன்ற பாடங்களினதும் பாடவிதானங்களே தமிழ்மொழி மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரதேச தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்தார். இதுவரை இப்பாடங்களுக்கான பாடவிதானங்கள் தமிழில் இல்லாமல் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (107)

# வடஇலங்கை நுண்கலைமன்ற பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை நுண்கலை மன்றத்தினால் ஆண்டுதோறும் நடத்தப்படும் பரீட்சைகள் மார்ச் 17, 18-ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. முதலாம் தரத்திற்கு மார்ச் 17 சனிக்கிழமையும், இரண்டாம் மூன்றும் தரங்களுக்கு மார்ச் 17, 18 இரு தினங்களிலும் பரீட்சை நடைபெறும் 2, 3-ம் தரங்களுக்கு செயன்முறைப் பரீட்சையும், கலை மதிப்பீடு அறிமுறைப் பரீட்சையும் நடைபெறும். சிற்பமாக்கல் செயற்பாடுகளுக்கு பரீட்சை முடிவடைந்தவுடனேயே மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

1990 அக்டோபரில் மீண்டும் அடுத்த பரீட்சைகள் 1, 2, 3, 4-ம் தரங்களுக்கு நடத்தப்படும் எனவும், 1991இல் 4-ம் தரம் சித்தியடைந்தோர் ஆசிரியதரப் பரீசைக்குத் தோற்றலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது


## 'ஈழநாடு'

### வார மலர்

### 11 - 03 - 1990

- யாககுண்டம் (தொடர் நவீனம்)
- போலிக் கௌரவம் (சிறுகதை)
- ரினிட்டாட் தீவில் 8 வருடங்கள்
- ஓர் 'நைன்ரியின் ஓலம்'
- ஞாயிறு மஞ்சரி
- மாணவர் மன்றம்
- மங்கையர் மஞ்சரி

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

**பக்கங்கள் - 12**

**விலை ரூபா 3/-**


## பிரச்சனை குறித்து பேச்சுவார்த்தை

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ். கிளையின் தலைவர் திரு. சி. திருநாவுக்கரசு, செயலாளர் திரு. என். எம். கந்தசாமி ஆகியோர் யாழ் பிரதேச சுகாதாரசேவைகள் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபையை அவரது அலுவலகத்தில் சந்தித்து மருந்துக் கலவையாளர்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்னைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

இதுவரை சுகாதார தொழிலாளர்கள் நியமிக்கப்படாதிருக்கும் மத்திய மருந்துச் சாலைகளுக்கு சுகாதாரத் தொழிலாளர்களை நியமனம் செய்தல், மருந்துக் கலவையாளரின் இடமாற்றம் ஆகியவிடயங்கள் உட்படப் பல்வேறு விடயங்கள்பற்றி தொழிற் சங்கப் பிரதிநிதிகள் பணிப்பாளருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். (72)

### சாதனைகளை முறியடித்த
## மாணவிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். தெற்கு கொத்தணியைச் சேர்ந்த கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய மாணவிகள் செல்வி தில்லைநாதன் திருமகள், செல்வி கோபால கிருஷ்ணன் தர்மினி ஆகியோர் கடந்தவருடம் நடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் கடந்த பத்தாண்டுகளில் இப்பாடசாலைச் சாதனைகளை முறியடித்து மிகத் திறமையாகச் சித்தியடைந்துள்ளனர்.

இரு மாணவிகளின் சாதனைகளையும் வித்தியாலய அதிபர் திரு. த. தங்கராசா பாராட்டியுள்ளார். (54)

## பொதுக்கேணி திருத்தவேலை

(மானிப்பாய்)

யாழ். வில்லூன்றி மயானப் பொதுக்கேணி திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகரின் துரித முயற்சியினால் இதற்கென ரூபா 40,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

## இன்றைய பலன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தாய்வழி கவலை. மனச்சுமை.

தனுசு: அதிஷ்டக் குறைவு, பயணங்களால் செலவு, குடும்பப்பிரிவு, போராட்டம்.

மகரம்: நோய்வாட்டும், வைத்திய செலவு, குடும்பத்தில் சந்தேகம் மனக்கவலை

கும்பம்: சகோதர உதவி, சென்ற இடத்தில் கௌரவம், குடும்பசிறப்பு பணவரவு.

மீனம்: தொழில் உயர்ச்சி குடும்பத்தில் சுபகாரியம் அதிகாரிகள் பாராட்டு மன நிறைவு.

# விளையாட்டுப் போட்டிக்கு ஆசிரியர்கள் ஆட்சேபம்!

(நாவற்குழி)

கைதடிக் கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான இல்ல மெய்வல்லுநர் போட்டி கொத்தணி அமைப்பு முறைகளுக்கு முரணானது என்று ஆறு ஆசிரியர்கள் கைச்சாத்திட்ட ஆட்சேபனைக் கடிதம் மேற்படி போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் கோட்டக் கல்வியதிகாரி திரு. சி. தியாகராசாவிடம் மைதானத்தில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது.

அவ் ஆட்சேபனைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கொத்தணிப் பாடசாலைகளுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டியிலும் ஒவ்வொரு பாடசாலைகளினதும் இல்லங்களில் இருந்தும் ஒவ்வொரு விளையாட்டுக்கும் இரண்டு பேர் வீதம் தெரிந்து தெரிவுப்போட்டி மூலம் இறுதிப்போட்டி நடாத்தவேண்டும் என்றும் அப்படி நடாத்தப்படாத பட்சத்தில் அது கொத்தணி மட்டத்திலான இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியாக இல்லாமல் பாடசாலைகளுக்கிடையிலான நேரடிப் போட்டியாகவே அமையும். (107)

# இப்படியும் நடக்கிறது

உங்களிடம் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் இருக்கிறதா?

''இது என்ன விசர்க் கேள்வி?'' என்று கேட்காதீர்கள். சற்று 'சீரியஸாக'த்தான் கேட்கிறேன். கொஞ்சம் கவனியுங்கள்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் யாழ். செயலகத்தில் பதியப்படும்போது, மூன்று பிரதிகள் நிரப்பப்படும். ஒரு பிரதி உங்களுக்கு. அதாவது: பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் சொந்தக்காரருக்கு இரண்டாவது பிரதி யாழ். செயலகத்தில் இருக்கும். மூன்றாவது மூலப் பிரதி கொழும்புக்கு தலைமைச் செயலகத்துக்கு அனுப்பப்படும்.

ஒரு சில புகார்கள் மீது யாழ். செயலகத்துக்கு 'திக்' விஜயம் செய்தோம்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்துக்குச் சொந்தமானவரின் பெயர் செந்தூரன். யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்தவர். பிரிவு: யாழ்நகர் மேற்கு. இவருக்கு வழங்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் பிறந்த திகதி 12-10-1988 என்றும் தான் பிறந்த திகதி 11-08-1966 என்றும் உள்ளது. ஆனால் செயலகத்திலிருக்கும் பிரதியில் தாய் பிறந்தது 11-08-1986 என்று இருக்கிறது! கொழும்புக்கு அனுப்பப்பட்ட பிரதியில் என்ன இருக்கிறது என்பது உடனடியாகத் தெரியவில்லை.

தாய் பிறந்தது 1986 என்றால்; இரண்டு வயதில் ஒரு குழந்தையைப் பிரசவித்த பெருமையை கின்னர்ஸ் சாதனை மேற்படி தாய் பெறுகின்றார்!

அடிக்குறிப்பு: உங்களிடம் 'போலி' அத்தாட்சிப் பத்திரம் இருந்தால், தயவுசெய்து மேற்படி விஜயத்தை தூக்கி வீசிவிடுங்கள்;

''ஊடுருவி''

### ''யாழ். பல்கலைக்கழக
# மறுமலர்ச்சிக் கழகம்
## முழுமைபெற்ற அமைப்பாகும்''

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகமானது கடந்த பத்து ஆண்டுகாலமாக பல்கலைக்கழகத்தில் ஒரு முழுமை பெற்ற அமைப்பாக செயற்பட்டு வந்தது யாவரும் அறிந்த விடயமாகும். எனினும் கடந்த இரண்டரை வருடங்களாக அந்நிய ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறையாலும் அதன் துணை நின்ற அடிவருடிகளாலும் எமது செயற்பாடுகள் தடைப்பட்டன. ஆனாலும் அந்த இடைவெளியில் நாம் மறைமுகமாகச் செயற்பட்டு வந்தோம்.

இவ்வாறுயாழ்கல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழக தலைவர் திரு. வே. அருணோதயம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில்; இக்கால கட்டத்தைச் சாதகமாக்கிக் கொண்ட பல்கலைக்கழகத்தில் பொறுப்பு வாய்ந்த பதவி வகிக்கும் ஒரு சில நிர்வாக அதிகாரிகள் எமது மறுமலர்ச்சிக் கழகத்தை செயலிழக்கச் செய்யும் நோக்கிலும் தமது மேலாதிக்கம் வளர வேண்டும் என்னும் சுயநல நோக்கிலும் செயற்பட்டு வந்ததை இந்தநேரத்தில் நாம் பகிரங்கப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளோம்.

இதன் ஓர் அம்சமாக ஏற்கனவே எமது பாவனையிலிருந்த அலுவலக அறையினை எமது அனுமதியின்றி மாணவர் ஒன்றியத்திற்கு வழங்கியுள்ளனர். இதன் உள்நோக்கம் மாணவர் ஒன்றியத்திற்கும் எமது கழகத்துக்குமிடையே பகைமையை தோற்றுவித்து எம்மை அந்நியப்படுத்துவதேயாகும். இது மட்டுமல்லாது எமது எதிர்காலச் சந்ததிக்காக சேமித்து வைக்கப்பட்ட பெருந்தொகையான புத்தகங்களையும் என்றுமே தேடிக்கொள்ள முடியாத ஆவணங்களையும் இவர்கள் தீயிட்டுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு முன்னைய மாணவர் ஒன்றியத்தில் முக்கிய பொறுப்பினை வகித்த ஒரு சில மாணவர்களும்துணைநின்றனர் ஆனாலும் இவர்களின் இச்செயலானது மாணவர் ஒன்றியத்தின் முடிவல்ல என்பதையும் நாம் அறிவோம். இவர்களின் உள்நோக்கங்களை இனம் கண்டு செயற்படுவதன் மூலம் எமது ஒற்றுமையை வலுப்படுத்திக் கொள்வோம்.

சமூகரீதியான பிரச்சனைகளுக்கு விஞ்ஞான ரீதியான தீர்வு கண்டு நடைமுறைப் படுத்துவதே எமது இலட்சியம். எமது இலட்சியத்துக்காக இறுதிவரை உழைப்போம். நாம் மாணவர்களினதும் மாணவர் அவைகளினதும் உரிமைகளையும் கடமைகளையும் பெரிதென கருதுபவர்களை இவற்றை அடக்கி ஒடுக்கி தமது மேலாதிக்கத்தை செலுத்த எண்ணுவதை நாம் அனுமதியோம். இதற்கெதிராக இறுதிவரை குரல் எழுப்புவோம்.

## சட்டவிரோத மின் பாவனை

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பகுதியில் சட்டவிரோத மின்சாரப் பாவனையாளர்களினால் அலுவலகத்திற்கு மாதாந்தம் சுமார் 30 ஆயிரம் ரூபாவரை நஷ்டம் ஏற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோத மின்பாவனையால் சில பகுதிகளில் மின் விநியோகம் அடிக்கடி தடைப்படுவதாகவும், மங்கிய ஒளியில் மின் விநியோகம் இருந்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சில இடங்களில் உப அலுவலக மின்சாரப் பகுதிக்குச் சொந்தமான மின் வயர்களும் மற்றும் மின் சாதனங்களும் திருடப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சட்டவிரோதமாக மின்சாரம் எடுப்பவர்கள்மீது அலுவலக மின்சாரப் பகுதியினர் விரைவில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளவிருப்பதாக வலி தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. ந. குமாரசாமி தெரிவித்தார். (72)

# யாழ். ஆஸ்பத்திரி 5 மாடி கட்டடத்தை பூர்த்திசெய்ய மேலதிக நிதி ஒதுக்குக

## சிவமகாராசா கோரிக்கை

(காங்கேசன்துறை)

யாழ். அரசினர் வைத்தியசாலையில் அமைக்கப்பட்டு, இடைநிறுத்தப்பட்டுள்ள 5 மாடிக் கட்டடத்தைப் பூர்த்தி செய்ய மேலதிக நிதி ஒதுக்கி, உடனடியாக வேலைகளை ஆரம்பிக்க ஆவனசெய்யுமாறு சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். சிவமகாராசா அமைச்சருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றிலேயே கோரிக்கை விடுத்துள்ளார்.

1985ம் ஆண்டில் இந்த 5 மாடிக் கட்டட வேலைகள் ஆரம்பமாகின. 1987 அக்டோபரில் இடம்பெற்ற இந்திய அமைதிப் படையின் நடவடிக்கைகளை அடுத்து வேலைகள் ஸ்தம்பிதமடைந்தன. யாழ். மாவட்ட மக்கள் மட்டுமன்றி மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களையும் சேர்ந்த 15 லட்சம் மக்களுக்கு வைத்தியச் சேவையை அளிக்கும் இந்த வைத்தியசாலையில் பெரும் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் 1,015 படுக்கை வசதிகள் மட்டுமே உள்ளன. மேலும் 300க்கு மேற்பட்ட நோயாளர்கள் தரைகளில் படுத்திருந்து சிகிச்சை பெறுகிறார்கள். நோயாளர்களின் நெருக்கடி, சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படக் காரணமாகிறது.

மருத்துவ பீட மாணவர்களின் பயிற்சிக்குரிய வைத்தியசாலையாகவும் இது விளங்குவதால், அவர்கள் தமது பயிலுநர் கல்வியைப் பெறுவதிலும் கஷ்டம் அனுபவிக்க நேரிடுகிறது. ஆகவே உடனடியாக மேற்படி 5 மாடிக் கட்டடத்தைப் பூர்த்திசெய்து படுக்கை வசதிகளையும், மற்றும் வசதிகளையும் அதிகரிக்கவேண்டும்.

மிகுதி வேலையைப் பூர்த்தி செய்ய மேலதிக நிதி தேவைப்படுவதால், மந்திரி சபையில் இவ்விடயத்தைக் கவனத்தில் எடுத்து, மேலதிக நிதியை ஒதுக்கி வேலைகளை உடன் ஆரம்பிக்குமாறு கோருகின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (86)

### மேஜர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையை அடைந்தது.

கடந்த இரண்டாண்டுகளுக்குப் பின்னர், சொந்த தனையனையிழந்த துயரத்தைப் போல் மக்கள் தாமாக முன்வந்து துக்கத்தில் பங்கு கொண்டதை காணமுடிந்தது. குடாநாடு எங்கும் தோரணங்கள், கறுப்புக் கொடிகள், வாழைமரங்கள் கட்டப்பட்டு சோககீதங்கள் இசைக்கப்பட்டன. நேற்றுமுன்தினம் இரவு முதல் மக்கள் பல்லாயிரக் கணக்கில் வயது வித்தியாசமின்றி அந்த வீர வேங்கைக்கு அஞ்சலியைச் செலுத்தினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களை ஹர்த்தலாக அனுஷ்டிக்காது துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு அறிக்கைவிட்டிருந்து, மக்கள் காண்டீபனது மரணத்தை பூரண துக்கதினமாகவே அனுஷ்டித்தனர்.

காண்டீபனது இறுதிக்கிரியைகளை, இன்று வெள்ளிக்கிழமை செய்ய முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தும்கடைசி நேரத்தில் பெற்றோரின் விருப்பத்துக்கமைய மாற்றம் செய்யப்பட்டு நேற்று இரவே தகனம் செய்ய உத்தேசிக்கப்பட்டதாக கடைசி செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனாலும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை மேற்படி தகவல் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

### தீவுப் பகுதியில்

(வேலணை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி மேஜர் காண்டீபன் மறைவையொட்டி அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தீவுப் பகுதி எங்கும் உள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் அனைத்தும் நேற்று மூடப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

அரசாங்க காரியாலயங்கள் தொழிற்சாலைகள் என்பனவும் மூடப்பட்டு அங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. வீதிகள் எங்கும் தோரணங்கள், கட்டப்பட்டு முக்கிய சந்திகளில் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு சோக கீதங்கள் இசைக்கப்பட்டன.

வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, புளியங்கூடல் சந்தி ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

### ரயில் சேவை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு - யாழ்ப்பாணம் இரவு ரயில் சேவை ஜனாதிபதியின் பணிப்பின்மீது இன்று ஆரம்பமாகிறது.

கொழும்பு கோட்டையிலிருந்து இன்று இரவு புறப்படும் ரயில் சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வந்தடையும் நிலைமைகளை அவதானிப்பதற்காக இன்று வரும் ரயிலில் ரயில்வே திணைக்கள அதிகாரிகளும் பாதுகாப்பு ஊழியர்களும் வருகின்றனர்.

இவ் அதிகாரிகள் நிலைமைகளை அவதானித்து ரயில்வே திணைக்களத்துக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

நாளைகாலைக் யாழ்ப்பாணத்துக்கு வரும் அதிகாரிகளை, யாழ்ப்பாண ரயில் நிலையத்தில் புகையிரத நிலையஅதிபர் திரு. கே. மயில்வாகனம் வரவேற்பார். (12)

### தமிழக்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழக முதல்வர் திரு. கருணாநிதியையும், புதுடில்லியில் வெளிவிவகார அமைச்சக அதிகாரிகளையும் நேற்று முன்தினமும், நேற்றும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

இந்திய அமைதிப்படை புதுடில்லியில் குறிப்பிட்டவாறு மார்ச் மாத இறுதிக்குள் இலங்கையிலிருந்து முற்றாக வெளியேறிவிடும் என்றும், இதன் பின் சிலவேளைகளில் வடக்கு கிழக்கில் ஏதாவது மோதல் சம்பவங்கள் இடம்பெறலாம் என்றும் கருதியே மேற்படி சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் ஈ. பி ஆர். எல் எவ் வின் 'ஈழ ஜனநாயகக்குடியரசு'ப் பிரகடனமும், அது முன்வைத்த 19 அம்சக் கோரிக்கையும் இம்முயற்சிக்குத் தடையாக இருந்துவருவதாகப் புதுடில்லியில் அதிகாரி ஒருவர் தெரிவிததுள்ளார். (சி)

### கிராம சேவையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட புதிய கிராமசேவையாளருக்கு நியமனப்பத்திரமும் அவர்களுக்குரிய கடமைபார்க்கும் இடங்களும் எதிர்வரும் 15-ம் திகதியளவில் அறிவிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

### அரசியல்சட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. இது குறித்து இதுவரை எத்தகைய தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஆயினும் வடக்கிலும், கிழக்கிலும் பொது நிர்வாகம் வழமைபோல நடைபெற்றுவருகிறது. இப்பகுதிகளில் இருந்து இந்திய அமைதிப் படையினர் துரிதமாக வெளியேறுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இலங்கையிலுள்ள உயர்ஸ்தானிகர் திரு. எல் எம். மஹ்ஹோத்திரா இந்தியா சென்றுள்ளார். இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து வெளியேறும் இறுதித் தினத்தை விரைவில் எனக்கு அறிவிப்பார்.

கடந்த காலத்தில் சிங்கள சமுதாயமும், தமிழ் சமுதாயமும் தவறுவிட்டது. உண்மைதான் 'ஆனால் கடந்த காலத்தைப் பற்றிப்பேசாமல் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்

தமிழகத்திலிருந்து திரும்பி வரும் அகதிகளை வரவேற்கத் தயாராக இருக்கிறோம். புலிகள் அவர்களைக் கொல்லுமளவிற்கு கொடுமையானவர்கள் அல்ல. [து-அ)

### வரதர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் வழங்குவது தொடர்பான கருணாநிதியின் நிலைப்பாடு பற்றி எதுவும் தெரியவில்லை என்றும் மேற்படி செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இந்திய அமைதிப் படையினர் முற்றாக வெளியேறும் போது திரு. வரதராஜப் பெருமாளும் படையினரால் அழைத்துச் செல்லப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அழைத்துச் செல்லப்படும் திரு. பெருமாளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டியது இந்தியாவின் கடமையாகும், எனவே தமிழ் நாட்டில் அவருக்கு பாதுகாப்பான புகலிடம் வழங்கப்பட வேண்டும் என்று அந்த ராஜதந்திரி திரு. கருணாநிதியிடம் தெரிவித்துள்ளார். (து-சி)

### பரீட்சைகள் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் முறைசாராக் கல்விப் பிரிவினரால் 10-ம். 11-ம் திகதிகளில் நடாத்தப்படவிருந்த ஆங்கில, தமிழ் சுருக்கெழுத்து பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் 17-ம் திகதி தமிழ்மொழி மூலமும், 18-ம் திகதி ஆங்கில மொழி மூலமும் யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. (ம)

### ரஞ்சனின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும், மற்றும் அவரது சகாக்களையும் இந்தியா அழைக்கவேண்டுமென்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு ரஞ்சன் விஜயரத்ன இந்திய தூதரிடம் கேட்டிருந்தார்.

நேற்று முன்தினம் இந்தியா சென்ற தூதர் திரு. மஹ்ஹோத்ரா நேற்று திரு ரஞ்சனின் கோரிக்கையை புதுடில்லி அதிகாரிகளிடம் தெரிவித்தாரென்று அறிவிக்கப்படுகிறது.

### மாகாண சபை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சபையின் பிரதம செயலாளர் திரு. வி. என். சிவராஜாவை சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளார். (சி]

### யாழ்.மாவட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களுக்கான விடுதி மீண்டும் காங்கேசன்துறையில் ஆரம்பிக்கப்பட வேண்டும். தபால்களை ஏற்றுக்கொள்வதற்கான அதிகாரம் பிரதம தபால் பணிப்பாளரிடமிருந்து யாழ்ப்பாண தபால் நிலையத்துக்கு வந்தால் தான் இரவுரயிலில் தபால்கள் அனுப்பப்படும் என யாழ்ப்பாண பதில் தபால் அதிபர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண பிரதம தபால் நிலையத்தில் பெருந்தொகையான நூறுரூபா முத்திரைகள் விற்பனை செய்யக்கூடாது என அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதால் அவை தேங்கியுள்ளன. மற்ற முத்திரைகளுக்கு எதுவித தட்டுப்பாடும் இல்லை.

பிரதம தபால் நிலையம் தினமும் மாலை ஆறுமணி வரை இயங்குகின்றது தபால் விநியோகப்பகுதி மாலை ஏழு மணிவரை இயங்குகின்றது. தந்திச்சேவை ஆரம்பிக்கப்பட்டதும் தபால் நிலையம் இரவு ஒன்பது மணிவரை இயங்கும். (12)

---

## மேஜர் காண்டீபனுக்கு எமது கண்ணீர் அஞ்சலி

முன்னரெம் மூத்தோர்
இழந்த நம் உரிமையை
மீட்கும் உறுதியில்
ஆயுத மேந்தினோம்
அன்னையின் மேனியில் பதித்த
அந்நியப் பதிவினை
அழிக்கவே
உதிரத்தை ஊற்றினோம்
வருத்துவதற்கல்ல - நாம்
வாழ்வதற்காகவே
சாகிறோம்....

என்று சூளுரைத்த வீரவேங்கையே
எங்கு சென்றாய்... உன் மீது பொறாமை
கொண்டகாலன் உன்னைக்கவர்ந்துவர
கயவனை அனுப்பிவைத்தானோ!

கலங்குகிறோம். கண்ணீர் வடிக்கிறோம்
உனை எங்குஇனி காண்போம்.

## எமது வீர வணக்கங்கள்

புளியங்கூடல் சந்தி வர்த்தக சங்கம்.
(தீவுப்பகுதி மக்கள் நினைவாக.)

புளியங்கூடல்,
09-03-1990

(சி 3580)

---

## மரண அறிவித்தல்

### திரு. கோ. நவரெத்தினம்

திருவாளர் கோ. நவரெத்தினம் அவர்கள் 8-3-90 வியாழக்கிழமை மு. ப. 11-15 மணிக்கு காலமானார். இவர் கோவிந்தம்மாவின் அன்புக்கணவரும் கொழும்பு தெமட்டக்கொட தமிழ் மகாவித்தியாலய ஆசிரியர் ந. தவபாலசிங்கம் அவர்களின் தகப்பனும் கொம்பனித்தெரு புதிய செபமாலைமாதா தமிழ் வித்தியாலய ஆசிரியை திருமதி அனுசூயா தவபாலசிங்கம் அவர்களின் மாமனும், இளைப்பாறிய தபாலதிகாரி K. கிருஷ்ணசாமி-கொழும்பு நகர அபிவிருத்தி திட்டமிடல் இலாகா, இளைப்பாறிய உயர் அதிகாரி K. நடராசா திருமதி கோ. தங்கம்மா, திருமதி அ பாலகிருஷ்ணசாமி, திருமதி இரத்தினம் பிரான்சிஸ் ஆகியோரின் மூத்த சகோதரருமாவார் பூதவுடல் 9-3-90 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தவர்கள்.

15, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி 3581)

---

இப்பத்திரிகை ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81. Eelanadu P. O Box No. 49. Telegram: Eelanadu Telephone: 2291.